பக்கங்கள்: 16 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 02 ஞாயிற்றுக்கிழமை 18.07.2021 கதிர் 255

**இனி இது ரகசியம் அல்ல!**

யாழ்.செயலகத்துக்குள் அரச நிர்வாகத்துக்கு என்று அலுவலகம் அமைத்து விட்டு, அதனை அரசியல் செயலகமாக்கி அங்கு அரசியல் நடத்தும் அமுல்பேபியின் அலங்கோலம் தொடருகின்றது.

தன்னைப் பற்றிய பக்கம்02

# அரசை ஆட்டம் காணவைக்க எதிரணியினர் புதிய வியூகம்

## கொழும்பில் கரு தலைமையில் ஒன்றுகூடி முக்கிய பேச்சு



கொழும்பு, ஜூலை 18

தான்தோன்றித்தனமாகச் செயற்படும் அரசை ஆட்டம் காணவைக்கும் செயற்பாடுகளில் எதிரணியினர் களமிறங்கியுள்ளனர்.

சகல எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசுக்கு எதிரான போராட்டம் தீவிரப்படுத்தப்படவுள்ளது.

அந்தவகையில் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஏற்பாட்டில் விசேட கூட்டமொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது. 2

# ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்க வேண்டாம்

## எதிரணியிடம் பஸில் மன்றாட்டம்



இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசின் ஆட்சியைக் கவிழ்க்க முயற்சிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தற்போது கையிருப்பில் உள்ள 4 பில்லியன் டொலரை 2

# யாழில் 40 பேர் உட்பட வடக்கில் 63 பேருக்கு நேற்று கொரோனா

வடக்கு மாகாணத்தில் நேற்று 63 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 596 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 40 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 06 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும், வவுனியா மாவட்டத்தில் 02 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 04 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுடன் பரந்தன் தனிமைப்படுத்தல் நிலையத்தில் 10 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# வீடமைப்பு அதிகார சபையின் தலைவராக துமிந்த நியமனம்



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொலைக் குற்றத்துக்குத் தூக்குத்தண்டனை அனுபவித்து வந்த அவர், அண்மையில் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்டார்.

இந்தநிலையில், 2

# 1,300 வீட்டுத் திட்டப் பயனாளிகளில் இதுவரையில் 187 பெயர்கள் மாற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அரச உதவியுடன் வீடமைக்கும் திட்டத்திற்குத் தேர்வான பயனாளிகள் ஆயிரத்து 300 பேரில் 187 பேரின் பெயர்கள் உரிய பட்டியலில் மாற்றப்பட்டுள்ளமை கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குக் கிடைத்த 1,300 வீடுகள் அமைப்பதற்கான திட்டத்துக்குத் தெரிவான பயனாளிகள் என்ற பெயரில் ஏப்பிரல் மாதம் பிரதேசசெயலகங்களினால் அனுப்பப்பட்ட பட்டியல்களைக் காட்சிப்படுத்துமாறு கோரப்பட்டது. அதன் அடிப்படையில் இந்தப் பட்டியல்கள் ஜூலை மாதம் 6ஆம் திகதி காட்சிப்படுத்தப்பட்டது. இவ்வாறு காட்சிப்படுத்தப்பட்ட சமயம் ஏப்பிரல் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலிற்கும் தற்போது 2

# பருத்தித்துறை கொத்தணியில் நேற்று 28 பேருக்கு கொரோனா

## 18 பேர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள்

பருத்தித்துறை கொரோனா கொத்தணியில் நேற்று 28 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 19 பேரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 09 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை 2

# ரிஷாத் எம்.பிக்கு நேற்று மாரடைப்பு

## கொழும்பு வைத்தியசாலையில் சேர்ப்பு



உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் நிமித்தம் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் 2

# 31 பேர் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 31 பேர் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 17 ஆண்களும், 14 பெண்களும் அடங்குக்கின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 30 - 50 வயதுகளுக்கு இடைப்பட்ட 6 ஆண்களினதும், 2 பெண்களினதும் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதில், 60 வயது 2

# 1,452 பேருக்கு கொரோனா

இலங்கையில் நேற்று மாத்திரம் 1,452 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்தஎண்ணிக்கை 2 இலட்சத்து 83 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உண்மைகளை அம்பலப்படுத்திய பத்திரிகைகளின் பிரதிகளை பனரில் ஒட்டி, ஏதோ அதிசயம் நடத்தப்போகின்றவர் போல சாப்பாட்டுடன் அங்கு பத்திரிகையாளர் மாநாடு என்று தகவல் அனுப்பினார். 'பசிக்காத பத்திரிகையாளர்கள்' போகவில்லை. போனவர்களும் 'பசி'யாறப் போகவில்லை. என்னதான் அமுல்பேபி அலட்டுவார் என்று பார்க்கப்போனார்கள்.

அவர் பத்திரிகையாளர் மாநாடு நடத்திய முறைமையைத் தாங்காமல், உப்புப் போட்டுச் சாப்பிடும் ஒரு பத்திரிகையாளர் சீற்றத்துடன் கேள்வி கேட்டார். பத்திரிகைச் செய்தி தவறு என்றால், செய்திக்கு மறுப்புத் தருவதை விடுத்து, தனிப்பட்ட செய்தியாளர்கள், பத்திரிகையாளர்களை ஏன் தாக்குகின்றீர்கள் என்று அவர் வினவினார்.

'இல்லவே இல்லை, நான் பத்திரிகையாளர்கள் யாரையும் குறிப்பிட்டுத் தாக்கவில்லை' – என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைத்தார் அமுல் பேபி.

தன்னுடைய செய்தியாளர் மாநாட்டின் ஒலிப்பதிவை அவர் ஒரு தரம் திரும்பப் போட்டுக் கேட்டுப் பார்த்தால், அந்த ஒரு மாநாட்டிலேயே தான் முன்னுக்குப் பின் பொய் புரட்டுக் கூறுவதை அவரே அறிந்து கொள்வார். ஆரம்பத்திலேயே ஊடகவியலாளரைப் பெயர் குறிப்பிட்டு வசைபாடிய படியே நேற்றைய அலங்கோலத்தை ஆரம்பித்த அவர், பத்திரிகையாளர் மாநாடு முடியும் போது 'தெளிந்து' விட்டார் போலும். ஆனால் ஆரம்பத்தில் கூறியமையை மறந்து விட்டார். இவ்வளவுதான் அவர் அரசியல்...!

ஜி.சீ.ஈ. சாதாரண தரம் சித்தியடையாத ஒரு லட்சம் பேருக்கு வேலை வழங்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் திட்டத்தைத் தனது திட்டமாகக் காட்டி, மக்களை ஏமாற்றி, எப்படி வாக்குச் சுருட்டினார் என்பது தமிழ் மக்களுக்கு இப்போது நன்கு தெரியும். அவரின் பருப்பு இனி வேகாது என்பதும் அவருக்குப் புரியும்.

அந்தத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 6 ஆயிரத்து 300 பேருக்கு வேலை வாய்ப்பு என்று முதலில் அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அந்த விண்ணப்பங்களில் இருந்த தொலைபேசி இலக்கங்கள், விலாசங்களை எடுத்து வைத்துக் கொண்டு தான் தேர்தல் சமயத்தில் 'பீலா' விட்டு வாக்குகளை ஏமாற்றிச் சூறையாடியது அமுல்பேபி அண்ட் கோ.

பின்னர் அந்தத் திட்டப்படி, கிராம சேவையாளர் பிரிவுக்கு பத்து நியமனம் என்று கோட்டாவின் திட்டம் குறைக்கப்பட்டது. அதன்படி சுமார் 4 ஆயிரத்து 350 நியமனங்களாவது யாழ்.மாவட்டத்துக்குக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அமுல் பேபி தமது பதவிப் பவிசுக்காகத் தலையில் வைத்துக் கும்பிடும் கோட்டா, வடக்கு, கிழக்கில் அந்த நியமனங்களுக்கு ஆப்பு வைத்ததும் அமுல்பேபியின் சுத்துமாத்து அம்பலமானது.

அந்த நியமனங்களைத் தன்னுடையவையாகக் காட்டி அதனடிப்படையில் மக்களை ஏமாற்றி, வாக்குச் சுருட்டிய அமுல் பேபியின் முகமூடி, அந்த நியமனங்கள் வடக்கு, கிழக்கில் நிறுத்தப்பட்டதும் கிழிந்தது.

அதனால், வாக்களித்த மக்கள் கொதித்தெழுந்த போது, 'வேலை வாய்ப்பு நான் என்ன பொக்கட்டிலா வைத்திருக்கிறேன் தூக்கித் தருவதற்கு?' எனச் சீறிய அமுல் பேபி, மீண்டும் இப்போது தப்புத் தாளம் போடத் தொடங்கிவிட்டார்.

இப்போது அவரது பேச்சு முதலமைச்சர் கனவு 'ரோஞ்ச்'சில் போகின்றது.

நேற்றைய அலங்கோலப் பத்திரிகையாளர் மாநாட்டில் முதலமைச்சர் ஆசை – கனவு – தொனி – வெளிப்பட்ட பேசிய அவர், அதே நியமனங்களை வழங்கும் ஆசையைக் காட்டும் பீலாவைத் திரும்பவும் ஆரம்பித்திருக்கின்றமைதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

ஒரு கிராம சேவையாளர் பிரிவுக்கு பத்துப்பேர் என்ற – தெற்கில் இந்த நியமனம் கொடுக்கும் வீதத்தில் வழங்குவது என்றாலும் – யாழில் குறைந்த பட்சம் 4 ஆயிரத்து 350 பேருக்காவது இந்த நியமனம் கிட்ட வேண்டும்.

அந்தத் திட்டத்தில் இதுவரை யாழ். மாவட்டத்தில் நியமனம் பெற்றோர் ஆக 95 பேர்தான். அதிலும் 93 பேர்தான் சேவையில் உள்ளனர். 950 பேருக்கு நேர்முகப் பரீட்சை நடந்துள்ளது. சுகாதார தொண்டர்கள் 189 பேருக்கும் நேர்முகப் பரீட்சைகள் நடந்துள்ளன. அவ்வளவு தான்.

இந்த நியமனங்கள் அமுல்பேபியினுடையவையே அல்ல. ஆனால் ஏதோ தம்முடைய தயவில்தான் அவை வருகின்றன என்பது போல பம்மாத்துக் காட்டி வாக்குகளைச் சுருட்டினார். அது கிடைக்காததால் மக்கள் சீற்றமடைந்த போது நான் என்ன பொக்கற்றாலா நியமனங்கள் தருவது என்று கேட்டார். இப்போது அந்த நியமனங்கள் நீதியான அளவு வடக்குக்குக் கிடைக்காத போதிலும் முதலமைச்சர் கனவு வந்ததும் மீண்டும் அந்த நியமனக் கயிறை மக்களுக்கு விழுங்கக் கொடுக்க எத்தனிக்கின்றார் நம் அமுல் பேபி. ஏதோ அந்த நியமனங்கள் வந்து விட்டமைபோல கயிறு விடுகின்றார்.

பாவம், யாழ். மக்கள். இந்த பீலா விடும் பிஸ்னஸ்காரர்கள் எல்லாம் தாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்று மக்களைச் சுத்தி காதில் பூவைத்து, குடநாட்டையே சுருட்டி ஏப்பமிடும் நிலைமை.

தன் உண்மை முகத்தை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்களை பஞ்சோந்தி என்று திட்டுகின்றார் அவர்.

அலுவலக வாசலில் கம்பீரமாகக் காட்சியளித்த மஹிந்தவின் படம் ஒரே நாளில் மைத்திரியின் படமாக மாறியமையை விடவா பத்திரிகையாளர்கள் பஞ்சோந்தியாகி விட்டார்கள்...?

ஒரு தடவை மக்களை ஏமாற்றலாம். எல்லாத் தடவையும் அது சாத்தியமாகாது. ஆனாலும் அதற்கு முதல் சுருட்டுவதை எல்லாம் குடும்பமாகச் சுருட்டிவிடுவார்கள் அமுல் பேபி அண்ட் கோ. நாடும், மக்களும்தான் பாவம்...!

– மின்னல் –

## 1, 452 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆயிரத்து 512 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 962 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 55 ஆயிரத்து 833 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் தற்போது 23 ஆயிரத்து 946 பேர் சிகிச்சை பெறுகின்றனர்.

## ரிஷாத் எம்.பிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மாரடைப்புக் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நேற்று சேர்க்கப்பட்டுள்ளார். .

வைத்தியசாலையின் 42 ஆம் இலக்க சிகிச்சை அறையில் அவர் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலை தகவல்கள் உறுதி செய்தன.

ரிஷாத் பதியுதீன் தனக்கு நெஞ்சு வலிப்பதாக சி.ஐ.டி. அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ள நிலையில், அதனையடுத்தே அவரைக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சி.ஐ.டியினர் அழைத்துச் சென்றனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அங்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளை அடுத்து அவர் தேசிய வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைப் பெற அனுமதிக்கப்பட்டுள்ளார். சி.ஐ.டியினரின் பாதுகாப்புக்கு மத்தியில் அவர் சிகிச்சை பெறுகின்றார் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

# வண்ணாத்திப் பாலத்தடி விபத்தில் 7 பேர் படுகாயம்



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர் – வண்ணாத்திப் பாலத்தடியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஏழு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

புத்தூர் வீதி ஊடாக பயணித்த பிக்கப் வாகனம், குறுக்காகச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றைக் காப்பாற்ற முற்பட்ட வேளையில் இவ்விபத்து சம்பவித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் மற்றும் பிக்கப் வாகனத்தில் பயணித்தவர்கள் என ஏழு பேர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதில் நால்வர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தனிமைப்படுத்தலிலிருந்து சில பிரதேசங்கள் விடுவிப்பு

கொரோனாவால் முடக்கப்பட்டிருந்த மேலும் 4 மாவட்டங்களைச் சேர்ந்த 5 கிராம சேவகர் பிரிவுகள் நேற்று அதிகாலை 6 மணி முதல் விடுவிக்கப்பட்டுள்ளன.

கொரோனாப் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கேகாலை மாவட்டத்தின் மிஹிப்பிட்டிய கிராம சேவகர் பிரிவின் மாதெய்யாவ கிராமம் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாட்டுவாகல தோட்ட மேற்பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்தின் சுதுகம்பல மேற்கு மற்றும் கிழக்கு கிராமசேவகர் பிரிவுகளின் விஹாரை வீதி, விஹாரை ஒழுங்கை, கப்பர தேவாலய வீதி, வெலமெத்த பாரகம பகுதி என்பனவும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

## அரசை ஆட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மேற்படி இயக்கத்தின் தலைவர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர் திகாம்பரம், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்ன, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் உட்பட அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்.

அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஓரணியில் குரல் எழுப்புவதற்கும், ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நாட்டை நல்வழிப் படுத்துவதற்கும் இணைந்து செயற்படுவதற்கு இதன்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டவர்களில் 19 பேரில் 18 பேர் வல்வெட்டித்துறைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

அவர்கள் வல்வெட்டித்துறையின் ஆதிகோவிலடி, நாவலடிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதாரத் தரப்பினர் மேலும் கூறினர்.

## ஆட்சியைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முகாமைத்துவம் செய்வதன் மூலம், பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க முடியும்.

போர் நிலவிய காலப்பகுதியில் நாட்டில் 1.2 பில்லியன் டொலர் கையிருப்பு காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு சில தடவைகள் முடக்கப்பட்டமையால், அரசுக்கு நிதி கிடைக்கும் வழிகளில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

அரசுக்குக்கும், மக்களுக்கும் பணம் கிடைக்கும் முறைமையை நடைமுறைப் படுத்துவதற்கு கூடிய விரைவில் நாடு முழுமையாகத் திறக்கப்பட வேண்டும்.

பொலரின் பெறுமதி அதிகரிப்பு தொடர்பில் பொய்ப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலைமையை எதிர்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கின்றோம் – என்றார்.

## வீடமைப்பு அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சில தினங்களுக்கு முன்னர் அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்திருந்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் உள்ள வீடமைப்பு அமைச்சின் கீழ் வரும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக துமிந்த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

## 1,300 வீட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

காட்சிப்படுத்தப்பட்ட பட்டியலிற்கும் இடையே 187 பேரின் பெயர் விவரங்கள் மாறுபடுகின்றன. இவ்வாறு மாறுபடுகின்ற எண்ணிக்கையில் 50ற்கும் குறைவான எண்ணிக்கைப் பெயர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தமது ஆய்வின் அடிப்படையில் திருத்தம் செய்யப்பட்டவை எனக் கூறப்பட்டுள்ள போதிலும் எஞ்சியவை எதற்காக மாற்றப்பட்டன என்பது தொடர்பில் விவரம் தெரிவிக்கப்படவில்லை.

இதேநேரம் இவ்வாறு மாற்றப்பட்ட பெயர் பட்டியலில் அதிகமான பெயர்கள் மாற்றப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவே விளங்குகின்றது. இங்கே 46 பெயரின் விவரங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் தற்போது நாளை 19ஆம் திகதி வரையில் முறைப்பீட்டிற்குச் சந்தர்ப்பம் வழங்கி பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை மேலும் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. அவற்றின் எண்ணிக்கை நாளை 19ஆம் திகதிக்குப் பின்பே தெரியவரும்.

## 31 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மற்றும் அதற்கு மேற்பட்ட 11 ஆண்கள் மற்றும் 12 பெண்களின் மரணங்களும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 733 ஆக அதிகரித்துள்ளது.

# மக்களின் உரிமைக்காக போராடுபவர்களின் கைதுக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்

வவுனியா பழைய பஸ் நிலையத்திற்கு அருகில் கவனவீர்ப்பு போராட்டமொன்று நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியினரின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எரிபொருள்களின் விலையேற்றம், விலைவாசி உயர்வு மற்றும் மக்களின் உரிமைக்காகப் போராடுபவர்களைக் கைது செய்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அண்மைக்காலமாக அரசாங்கம், மக்களுக்கு எதிரான செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக உணவுப்பொருள்கள், எரிபொருள் ஆகியவற்றில் சடுதியான விலை அதிகரிப்பு அனைத்து மக்களுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் நலனை முன்னிறுத்துவோம் என்று ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் மக்கள் மீது சுமைகளையும் துன்பங்களையும் மாத்திரமே ஏற்படுத்திவருகின்றனர்.

இதனால் மக்கள் வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை அரசின் அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டிக்கும் அரசியல் சமூகச் செயற்பாட்டாளர்களை, பொலிஸ் ஊடாகக் கைது செய்து தனிமைப்படுத்தும் செயலை இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது. – எனக் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை ஆசிரியர்சங்க உறுப்பினர்கள், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர், புதிய சிந்தனை பெண்கள் அமைப்பு ,தேசிய கலை இலக்கிய பேரவையினர் உட்பட பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## தலவாக்கலை பகுதியில் ஜே.வி.பியினர் போராட்டம்



கண்டி, ஜூலை 18

சேர் ஜோன் கொத்தலாவ தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சட்ட மூலத்தை மீளப் பெறுமாறு வலியுறுத்தியும், அரசாங்கத்தின் ஒடுக்குமுறை செயற்பாடுகளுக்கு எதிராகவும் ஜே.வி.பியினர் நேற்று (சனிக்கிழமை) தலவாக்கலை நகரில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜே.வி.பியின் அரசியல் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

இலவசக் கல்வி பெறும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய போராட்டக்காரர்கள், கல்வியை தனியார் மற்றும் இராணுவமயப்படுத்துவதற்கு இடமளிக்கக்கூடாது எனவும் கோஷமெழுப்பினர்.

அத்துடன், நாட்டில் நிலவும் உரத் தட்டுப்பாட்டால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அவர்களுக்கு உரம் விநியோகிக்கப்பட வேண்டும் என குரல் எழுப்பிய ஜே.வி.பியினர், அத்தியாவசியப் பொருள்கள் உட்பட ஏனைய பொருள்களின் விலையை உடன் குறைக்குமாறும் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்தனர்.

அதேவேளை, மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு உரிய வகையில் இடம்பெறவேண்டும். அவர்களின் தொழில்சார் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் எனவும் திட்டவட்டமாக அறிவித்தனர்.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சில உட்பிரிவுகளை திருத்த முடிவு

1978 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் சில உட்பிரிவுகளை திருத்துவதற்காக பாதுகாப்பு செயலாளர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பரிந்துரைகளை குறித்த குழு வழங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த வேண்டுகோளுக்கு இணங்க, வெளிவிவகார அமைச்சு சமீபத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவித்தது. அதன்படி தற்போதைய சூழ்நிலைகளில் பொருந்தாத சில உட்பிரிவுகளை திருத்துவதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக அறியமுடிகின்றது.

## பொதுப் போக்குவரத்து சேவை ஓகஸ்ட் 1 இல் மீளவும் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 18

ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் அனைவரும் செல்லக்கூடிய வகையில் பொதுப் போக்குவரத்து சேவைகளை முன்னெடுக்க அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

அதற்கேற்ப பஸ்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு அத்தியாவசியமான மற்றும் அத்தியாவசியமற்ற பயணிகளும் பயணிக்க முடியும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நேற்று (சனிக்கிழமை) முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான பஸ் மற்றும் ரயில் உட்படப் பொதுப் போக்குவரத்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஓகஸ்ட் 01 முதல் குறைந்த எண்ணிக்கையிலான பஸ்கள் மற்றும் ரயில் சேவைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என திலும் அமுனுகம குறிப்பிட்டார்.

## தோட்ட வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தலைமையில் கலந்தாய்வு



தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் அமைச்சின் அதிகாரிகளுடன் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சில் இடம்பெற்றது.

இதன் போது அமைச்சின் ஊடாக கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான விடயங்கள் அமைச்சின் அதிகாரிகளால் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

பெருந்தோட்டப் பகுதிகளில் அமைக்கப்பட இருக்கும் வீட்டுத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்து ஆலோசிக்கப்பட்டது. கடந்த அரசாங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் பல்வேறு உட்கட்டமைப்புகள் மற்றும் குறைபாடுகள் காணப்பட்டன. அக்குறைபாடுகளை வெகு விரைவில் நிவர்த்தி செய்து மக்களிடம் கையளிப்பது தொடர்பாகவும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

அமைச்சின் கீழ் இயங்கும் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் செயற்பட்டு வரும் ஹற்றன் தொண்டமான் தொழில் பயிற்சி நிலையத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் கலையரங்கு கட்டடத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாகவும் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் அதிகார சபையின் ஊடாக ஆரம்பிக்கப்படவிருக்கும் நகரங்கள் தோறும் நூலகங்கள் அமைக்கும் விசேட வேலைத்திட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் டி.பி.ஜி. குமாரசிறி, அமைச்சின் அதிகாரிகள், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளர், சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்தமன்றத்தின் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரசபையின் பணிப்பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் - 076 443 8622







ZOOM மூலம் IELTS வகுப்பு

ஓய்வுபெற்ற ஆங்கில போதனாசிரியரின் zoom மூலமான IELTS (Academic/General) பரீட்சை வகுப்பு. தனிப்பட்ட கவனம். பயில விரும்புவோர் தொடர்பு கொள்க:-

076- 5500036

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## செய்யுமா தமிழர் தரப்புகள்?

**தமிழர்களைப் பற்றி – குறிப்பாக வடக்குத் தமிழர்களைப் பற்றி – பேசும் போது பொதுவாக நண்டுக் கதை குறித்துப் பிரஸ்தாபிப்பார்கள். அடைப்புக்குள் இருந்து வெளியேறித் தப்புவதற்கு ஒரு நண்டு முயற்சித்தால் மற்ற நண்டுகள் அதை இழுத்து விழுத்தி விடுமாம். இதனால் அகப்பட்ட நண்டுகள் ஒவ்வொன்றாக ஏறித் தப்புவதற்கு வாய்ப்பு இருந்தும், ஒன்றை ஒன்று மாறி மாறி இழுத்து விழுத்தி, அனைத்தும் சேர்ந்து மாட்டிக் கொள்வதை அவை உறுதி செய்யும் என்று பேச்சு வழக்கில் கூறுவதுண்டு.**

**இன்றைய நிலையில் தமிழர்களின் அரசியல் ரீதியான நிலைமையும் இதுதான். கட்சிகளும் தரப்புகளும் மாறி மாறி ஆளாளுக்கு இழுத்து விழுத்தும் முயற்சி பற்றியே சிந்தித்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. வேடனின் வலையில் சிக்கிய பறவைகள் போல ஒன்றுபட்டுச் செயற்பட்டு விரித்த வலையுடன் ஒன்றாகப் பறந்து தப்பிக்க முயலும் எத்தனத்தில் அவை இல்லை என்பது கண்கூடு.**

**தமிழ்த் தேசியம் பேசும் – வலியுறுத்தும் தரப்புகளை ஒன்றிணைக்கும் முயற்சி பல மட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டதாயினும் அவை முன்நவர்வாக இல்லை. மாறி, மாறி நமக்குள் முட்டுக்கட்டை போட்டுக் குழப்புவதைக் கண்டு எதிரியே கைகொட்டிச் சிரிக்கும் நிலைமை.**

**இத்தகைய முயற்சிகளை சரிவர முன்னெடுப்பதற்குப் பின் அடிப்படைகள் அவசியம்.**

**ஒன்று – கட்சிகள், கூட்டுகள், அணிகள் கடந்து தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் அனைத்தத் தரப்புகளையும் ஒன்றிணைக்கும் முயற்சியாக அது இருக்க வேண்டும்.**

**இரண்டு – அந்த முயற்சிகளில் ஈடுபடும் அல்லது ஆரம்பிக்கும் தரப்புகள், தமக்கான இலக்கு ஒன்றையும், உள்நோக்கம் ஒன்றையும் மறைவான நிகழ்ச்சித் திட்டமாக வைத்துக் கொண்டு, அதை எட்டுவதற்காக இத்தகைய ஒன்றுபடுத்தும் நாடகத்தை முன்னெடுக்கின்றன என்ற எண்ணம் – கருத்து – ஏனைய தரப்புகளுக்கு ஏற்படாமல் இதனை முன்னெடுக்க வேண்டும்.**

**மூன்று – தமிழர் தேசியத்தை வலியுறுத்தும் தரப்புகள் ஒரு குரலில் பேசுவது – விடயங்களை அணுகுவது – இத்தகைய திட்டங்களின் இலக்கு என்றால், அப்படி ஒரு குரலில் பேசவும், அணுகவும் வேண்டிய முக்கிய விடயங்களை முதலில் வரையறை செய்து கொள்ள வேண்டும். இயலுமானால் எழுத்தில் அவற்றை வரையறை செய்வது நல்லது.**

**நான்காவது – தமிழ்த் தரப்புகளும் கட்சிகளும், இவ்விவகாரத்தை ஒட்டி குழுக்கள், குழுக்களாக ஆங்காங்கே தனித்தனியாகப்பேசிக் கலைவதை விடுத்து, நேரிலோ அல்லது தற்போதைய தொழில்நுட்ப வசதிகள் மற்றும் கொவிட் தடுப்பு இடைஞ்சல்களுக்கு மத்தியில் மெய்நிகர் முறையிலோ இயன்றவரை எல்லாத் தரப்புகளும் ஒன்றாகச் சந்திக்கக்கூடிய நேரத்தை ஒழுங்குபடுத்தி கருத்துப் பரிமாற்றம் செய்யலாம். ஒவ்வொரு கூட்டம், சந்திப்புத் தொடர்பிலும் கூட்ட அறிக்கைகளை – குறைந்த பட்சம் சுருக்க அறிக்கைகளையாவது – பேணுவதும், முந்திய கூட்ட அறிக்கையை பிந்திய கூட்டத்தின் ஆரம்பத்தில் வாசித்து, உறுதிப்படுத்தி, ஆவணப்படுத்துவதும் கூட அவசியமானதுதான்.**

**தமிழ்த் தேசியத் தரப்புகளை ஒன்றுபடுத்தும் ரெலோ – புளொட் கட்சிகளின் கூட்டு முயற்சியை ஒட்டிய சந்திப்பு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் எம்.பியின் இல்லத்தில் நடந்துள்ளது.**

**நாம் மேலே குறிப்பிட்ட அடிப்படை அம்சங்கள் எல்லாம் இந்தச் சந்திப்பில் பின்பற்றப்பட்டனவா, அந்தத் திசையில் முன்னேறும் – கருத்தொருமித்த நிலைப்பாடு – சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே ஏற்பட்டதா என்பவை எல்லாம் இப்போது உறுதியாகவில்லை.**

**எனினும், எதிரும் புதிருமாக நின்ற தமிழர் தரப்புகள் பலவும், காலத்தின் கட்டாயத்தை உணர்ந்து ஒன்று கூடிப் பேச – ஒரு குரலில் பேச – தயாராகி வந்திருக்கின்றன. இது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.**

**தமிழர்களை அடக்கி ஒடுக்கி, அடிமைப்படுத்தி ஆள நினைக்கும் சிங்களப் பேரினவாதம் தென்னிலங்கையில் உச்சம் பெற்றிருக்கின்றது.**

**இந்தத் தீவில் தமிழர்கள் தங்களது பாரம்பரிய தாயகமான வடக்கிலும் கிழக்கிலும், தனித்துவச் சிறப்போடு வாழும் பாரம்பரிய உரிமையை சிதைத்தழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் சிங்களப் பேரினவாதம், அதற்காகப் பல்வேறு அடக்குமுறை நடவடிக்கைகளை – பல்வேறு வடிவங்களில் – தமிழர் தேசம் மீது கட்டவிழ்த்து விட உறுதி கொண்டு நிற்கின்றது.**

**அதன் அச்சுறுத்தலை தமிழர்கள் எதிர்கொண்டு, மீண்டும் புத்துணர்வுடன் எழுச்சி கொள்வதாயின், அதற்காக நாம் பிரிக்க முடியாதவர்களாக ஒன்றுபட்டு எழவேண்டும்.**

**பௌத்த, சிங்களப் பேரினவாத அச்சுறுத்தலில் இருந்து எமது தமிழ் மண்ணையும், மக்களையும் காப்பதற்கேனும் நாம் ஒன்றுபட்டு நிற்பது இந்தக் கட்டத்தில் மிகவும் அத்தியாவசியமாகும்.**

# அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்தார் ஸ்டாலின்

தான் பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அரசமைப்பின் 17 ஆவது உறுப்புரையுடன் சேர்த்து பார்க்கப்பட வேண்டிய 126 ஆவது உறுப்புரை பிரகாரம் அவர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி ரவீனா டி சில்வா ஊடாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் சிரேஷ்ட சட்டத்தரனி ருஷ்தி ஹபீப், ஜோசப் ஸ்டாலின் சார்பில் ஆஜராகவுள்ளார்.

தனக்கு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்ட போதிலும் பொலிஸார் பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியமையூடாக தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பறிவிக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அந்த மனுவூடாகக் கோரியுள்ளார்.

அத்துடன் ஆர்ப்பாட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்குத் தடை விதித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிடப்பட்ட கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு பொலிஸ் ஊடகப் பிரிவினால் கடந்த 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை செல்லுபடியற்றது என உத்தரவிடுமாறும் குறித்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, ஜோசப் ஸ்டாலினுக்கு ஒரு லட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன, மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேபந்து தென்னகோன், மிரிஹான, வெலிக்கடை மற்றும் தலங்கம பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், பத்தரமுல்ல சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன மற்றும் சட்டமா அதிபர் உள்ளிட்ட 10 பேர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவின் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

# மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் வெளிப்படையாக இருப்போம்



## தினேஸ் உத்தரவாதம்

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கப் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் செயற்படும் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சில் சிவில் அமைப்பினர் மற்றும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வது பற்றியும் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது என்றும் அதற்கான கருத்துக்களை முன்வைக்க அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பயங்கரவாத தடுப்பு சட்டம் குறித்து சர்வதேச மட்டத்தில் பல்வேறு வகையான பிழையான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன எனவும் அமைச்சர் தினேஷ் குணவர்தன இதன்போது சுட்டிக்காட்டினார்.

# பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான இணையவழி பாலியல் குற்றங்கள் அதிகரிப்பு!

கொரோனா முடக்க காலத்தில் இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான இணைய வழி பாலியல் குற்றச்சம்பவங்கள் 300 வீதமாக அதிகரித்துள்ளன எனப் பெண்கள் உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் முதல் கொரோனாத் தொற்று காலத்தில் பல சந்தர்ப்பங்களில் நாடு முடக்கப்பட்டிருந்தது.

இந்தக் காலகட்டத்திலேயே இந்த குற்றச் சம்பவங்கள் பிரதான இடத்தை வகித்தன என அந்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

பெண்கள் அபிவிருத்தி நிதியத்தின் ஏற்பாட்டாளரான ஈ.எம்.பண்டார மெனிக்கே தகவல் தருகையில் -

இந்தக் காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான பொதுவான துன்புறுத்தல்கள் 33 வீதத்தால் அதிகரித்திருக்கும் அதேவேளை வீட்டு வன்முறை சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இணையவழிக் கற்றல் நடவடிக்கைகள் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளன என்கிறார்.

இதேவேளை சுதந்திர வர்த்தக வலயங்களில் உள்ள ஆடைத்தொழிற்சாலைகளில் கடமை புரியும் பெண்களின் நிலை மிக மோசமானதாக உள்ளதாக, இலங்கை தாய்மார்கள் மற்றும் மகள்மார் என்ற அமைப்பின் இணைப்பாளர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார்.

தொற்றுக் காலத்தில் சில ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் பணியாற்றும் பெண்களுக்கு ஓய்வின்றி வேலை வாங்கியுள்ளனர்.

சில தொழிற்சாலைகள் கிருமி நீக்கம் செய்யப்படவில்லை. இதுவும் பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல்களே, ஆகவே இவ்வாறான சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு ஓர் ஒழுங்கு முறை அமைப்பு அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தடுப்பூசி முழுமையாக செலுத்தினாலும் டெல்டா தொற்றுப் பரவும் அபாயமுண்டு!

## வைத்தியர் ரஞ்சித் சுட்டிக்காட்டு

தடுப்பூசி நடவடிக்கைகள் முழுமையாக முன்னெடுக்கப்பட்ட போதிலும் டெல்டா தொற்று பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக தற்போது இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டவர்களும் தொற்றுக்குள்ளாகும் நிலைமை காணப்படுவதாகவும் அப்பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் சுட்டிக்காட்டினார்.

ஆகவே மக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் படிப்படியாக சுகாதாரக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டாலும் தொற்றின் நிலைமையைக் கருத்தில் கொண்டு மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடையை தளர்த்துவது அல்லது நீடிப்பது குறித்து அறிவிக்கப்படும் என்றார்.

மேலும் டெல்டா மாறுபாடு அதிகரிக்கும் பட்சத்தில் மேலதிக கட்டுப்பாடுகளை அமுல்படுத்துவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன எனவும் சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு


'சுதந்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்த இந்தியரான சுப்பராமனுடன் பத்திரிகையின் ஆசிரியர் எஸ்.டி.எஸ். ஐயா.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

**ந.வித்தியாதரன்**

கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில் தண்டனை சட்டக் கோவையின் கீழ் குற்றம் சுமத்தி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தி, அதன் கீழ் குற்றவாளியாகக் கண்ட எதிரிகளுக்கு, மீண்டும் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் தண்டனைத் தீர்ப்பாக மரண தண்டனை - தூக்குத் தண்டனை - விதிக்கப்படுகின்றது என்பதை முதல் நாள் பிற்பகலிலேயே நான் அறிந்து கொண்டு, எதிரித்தரப்பு சட்டத்தரணிகளை உஷார்ப்படுத்தினேன் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

அதை உறுதிப்படுத்தியதும், சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சிவசிதம்பரம், தமது ஜூனியர் சட்டத்தரணி கரிகாலனை வெலிக்கடைக்கு அனுப்பி குட்டிமணி, ஜெகன் இருவரையும் சந்திக்க வைத்து இருவரையும் தயார்ப்படுத்தச் செய்தார் என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதும் குற்றவாளிக் கூண்டிலிருந்து என்ன வாக்கு மூலத்தை அவர்கள் கூறுவது என்பது தொடர்பில் சட்டத்தரணிகளிடையே கடைசி நேரம் வரைக் குழப்பம் இருந்தது.

எதிரிகள் இருவரும் அரசியல் ரீதியாக ஏதேனும் கூறப்போக, அது அவர்களின் மேன்முறையீட்டு மனுக்களின் விசாரணையில் ஏதேனும் பிரச்சினையை ஏற்படுத்திப் பாதிப்பைத் தந்து விடலாம் என்று கரிகாலனும் ஏனைய சிலரும் எச்சரிக்கையாக இருந்தனர்.

ஆனால் குட்டிமணி அது குறித்தெல்லாம் சிந்திக்கவில்லை. வருவது வரட்டும், இதுதான் உலகுக்குத் தாம் பேச வேண்டிய சந்தர்ப்பம், இனிச் சந்தர்ப்பம் கிடைக்காது, மேன்முறையீட்டுக்குக் காத்திருப்பதில் அர்த்தமில்லை என்று தீர்மானித்திருப்பார் போல.

அவரது அந்த நேர உரை - சில வசனங்கள்தான் - பெரும் அதிர்வை ஏற்படுத்தின.

இந்தத் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் ஒரு சம்பவம். குட்டிமணிக்கும், சட்டத்தரணி கரிகாலனுக்கும் இடையில் நீதிமன்றத்துக்குள் நடந்த சம்பாஷனை. நானும் அதை செவிமடுத்தேன். முற்றாக நனைந்தவனுக்குக் குளிர் என்ன? கூதல் என்ன? என்பது போல அந்த உரையாடல் அமைந்தது.

தீர்ப்பு இப்படியாகப் போகின்றதே என்ற குழப்பத்தில் சட்டத்தரணிகள் மேசையில் பதற்றத்தோடு ஏனைய சட்டத்தரணிகளுடன் அமர்ந்திருந்தார் கரிகாலன் - நீதிபதியின் வருகையை எதிர்பார்த்து.


'தினபதி' ஆசிரியர் எஸ்.டி.எஸ். சிவநாயகமும், 'தினகரன்' ஆசிரியர் சிவகுருநாதனும்.

சோகத்தில் இருந்த அவரைப் பார்த்து *"ஏன் யோசிக்கிறியள்? கொஞ்சம் சிரித்துக் கொண்டே இருங்கள். நாங்கள் எதற்கும் தயார்"* - என்றார் குட்டிமணி.

பிறகு, தமது சட்டத்தரணியை உஷார்ப்படுத்துவதற்காக சற்று சத்தமாக *"பக்கத்திலை நிக்கிற மச்சான் கையிலை வைச்சிருக்கிற சமானை ஒரு ஐந்து நிமிஷம் இரவல் வாங்கித் தாங்கோ. எல்லாக் கவலையையும் தீர்த்து வைக்கிறன்."* - என்றார் படு கஷுவலமாக. நாம் அதிர்ந்து போனோம்.

அவர் 'மச்சான்' என்றது பக்கத்தில் நின்ற சிப்பாயை. 'சமான்' என்றது அந்தச் சிப்பாய் கையிலிருந்த இயந்திரத் துப்பாக்கியை.

குட்டிமணி அந்த நெருக்கடி நேரத்திலும் படுகஷுவலமாக இருந்தார். ஆனால் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் கைதிகள் கூட்டில் இருந்து அவர் வழங்கிய சொல்லாடல் உலகையே அவரை ஒரு பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது.

அவர் கூறிய வசனங்களை வேகமாகக் குறிப்பெடுத்துப் பெரும்பாலும் ஒரு சொல் விடாமல் அப்படியே செய்தியாக்கிக் கொடுத்தேன். அந்த வசனங்கள் 39 ஆண்டுகள் கடந்த இந்த நிலையில் - இன்றைய சூழலில் - எனக்கு வரிக்கு வரி நினைவில் இல்லை. எனினும் அதன் சாரம் பின்வருமாறு அமைந்தது:-

*"நாங்கள் தமிழர் தேசத்தவர்கள். உங்களின் இந்த நீதிமன்றம் எங்களை விசாரித்துத் தண்டிக்க முடியாது. அந்த அதிகாரம் உங்களுக்கு இல்லை.*

*"இன்று நீங்கள் ஒரு குட்டிமணியைத் தூக்கிலிடலாம். ஆனால் என்னைத் தொடர்ந்து பத்தாயிரம் குட்டிமணிகள் வருவார்கள். அவர்கள் என்னை விட வீரமானவர்களாகவும் ஆக்ரோஷமானவர்களாகவும் விடுதலை வேட்கை மிக்கவர்களாகவும் இருப்பர். அவர்களை எல்லாம் நீங்கள் தூக்கிலிட முடியாது.*

*"இந்த நீதிமன்றத்துக்குத் தலைவணங்கி ஒரு விடயத்தைக் கோரிக்கையாக நான் முன்வைக்கிறேன். நான் தூக்கிலிடப்பட்ட பின்னர் என் விழிகளைக் கண்ணிழந்த ஒரு தமிழ் இளைஞனுக்கு வழங்குங்கள். இந்தக் கண்களின் மூலமாக மலரப்போகும் தங்கத் தமிழ் ஈழத்தை தரிசிக்க ஆசைப்படுகிறேன்."* என்று முழங்கினார் குட்டிமணி.

ஜெகனோ தம்பாட்டுக்கு *"சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதனை நான் அனுபவிக்கத் துடித்தேன். அதற்காக என்னைத் தூக்கிலே போடுகின்றீர்களே. என்னைத் தூக்கிலிடலாம். ஆனால் மலரப் போகும் தமிழ் ஈழத்தை நீங்கள் தூக்கில் போட முடியாது."* என்று குமுறினார்.

குட்டிமணியின் இந்த உரை நான் 'உதயன்', 'சுடர்ஒளி'யின் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலோ, அல்லது இப்போது இருக்கும் 'காலைக்கதிர்' ஆசிரியர் பதவி சமயத்திலோ செய்தியாக என் கைக்குக் கிடைத்திருக்குமானால் நெஞ்சைத் தொட்டு, உணர்வை பீறிட வைக்கும் உணர்ச்சிப் பிழம்பான தலைப்பு ஒன்றை இட்டுப் பிரசுரித்திருப்பேன்.

ஆனால், அடுத்த நாள் தினபதியில் அது எப்படிப் பிரசுரமானது என்பதை நோக்க முன்னர் - அதே அடுத்த நாள் அந்தச் செய்தியை ஒட்டித் தமது உடன்பிறப்புகளுக்கு தமிழகத்தில் செய்தி சொன்ன கலைஞர் கருணாநிதி இந்த விடயத்தை எப்படி எழுத்தில் கையாண்டார் என்பதைப் பார்க்க முன்னர் - நீதிமன்றத்தில் நடந்த ஒரு விடயத்தைக் கூறவேண்டும்.

தீர்ப்பு வழங்கிய அன்றைய தினம் தமிழ் மொழி பெயர்ப்பாளர் எவரும் மன்றுக்குச் சமுகம் தந்திருக்கவில்லை. ஆகவே அந்த வேலையை தமிழ்ச் சட்டத்தரணிகளே முன்னெடுக்க வேண்டியிருந்தது.

தண்டனை அறிவித்த பின்னர் குற்றவாளிக் கூண்டிலிருந்த குட்டிமணியை நோக்கி *"நீங்கள் ஏதாவது கூற விரும்புகின்றீர்களா?"* - எனச் சிங்களத்தில் நீதிபதி கேட்டபோது அதை எழுந்து நின்று குட்டிமணிக்குத் தமிழில் மொழி பெயர்த்துக் கூறினார் சிரேஷ்ட சட்டத்தரணி எம்.சிவசிதம்பரம். தொடர்ந்து குட்டிமணி தனது கருத்தை கூற முற்பட்ட போது, ஒவ்வொரு வசனமாக அதனை இடைமறித்து, நிறுத்தி, பதிவதற்கு வசதியாக ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறினார் சிவசிதம்பரம்.

குட்டிமணியின் அந்தக் கருத்துச் சொல்லாடல் நீதிமன்றத்தை அதிர வைத்தது. ஒரு சுதந்திரப் போராளியின் வீர முழக்கமாக - கட்டம்பொம்மன் திரைப்பட வசன வீச்சுப் போல - இருந்தது. அந்தச் சொல்லாடல்களை உள்வாங்கிய சிவசிதம்பரம் தடுமாறியமையைக் கண்டேன். உணர்வுகளை அடக்க முடியாமல் அவரது நா தழுதழுத்தது. வழக்கமாக நீதிமன்றத்தில் தமது ஆஜானபாகுவான தோற்றத்தோடு, சிங்கக் குரலில் கர்ச்சிக்கும் சிவசிதம்பரம் அந்த உணர்ச்சிப் போக்கை உள்வாங்கி மொழி பெயர்த்துக் கூற முடியாது, தலையைக் கவிழ்ந்தபடி தமது கதிரையில் பொத்தென்று சரிந்தார். மேசையில் நலைகுப்புற கவிழ்ந்தபடி துக்கத்தில் கேவியதை நான் செவிமடுத்தேன். நீதிபதிக்கும் ஏனைய சட்டத்தரணிகளுக்கும் அரச சட்டத்தரணி பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலக் மாரப்பனவுக்கும் கூட சூழ்நிலை விளங்கியது.

சிவசிதம்பரத்துக்கு பக்கத்தில் இருந்த கரிகாலன் நிலைமையைச் சமாளிக்க எழுந்தார். குட்டிமணி தொடர்ந்து கூறியவற்றை அவர் மொழி பெயர்த்தார். இரண்டொரு வசனங்கள்தாம். அதற்கிடையில் அவரும் உணர்ச்சி மேலீட்டால் அழத் தொடங்கினார். கடைசியாக மூன்றாவது எதிரியான கறுப்பனின் சட்டத்தரணி உருத்திரமூர்த்தி மிகுதி உரையை மொழி பெயர்த்து முடித்தார்.

இந்தப் பின்புலத்தில்தான் சற்று நேரத்தில், அன்று நீதிமன்ற அமர்வு முடிந்து வெளியேறும் போது குட்டிமணி எனது இரண்டு கைகளையும் பற்றியபடி *'பிரிவோம்; சந்திப்போம்!'* என்று விடைபெற்றார். அப்போது எங்கள் இருவரினதும் கண்கள் பனித்தன என்ற என் எழுத்தின் உணர்வை வாசகர்கள் இப்போது புரியக் கூடியதாக இருக்கும்.

அன்று அவர் கூறிய *'பிரிவோம்; சந்திப்போம்!'* என்பது இந்தப் பிறப்பில் நம் பிரிவையும், அடுத்த பிறப்பில் சந்திப்பையும் என்பதைக் குறித்ததோ என்னவோ?

இந்த விடயத்தை ஒட்டி அடுத்த நாள் கருணாநிதியின் எழுத்து எப்படி அமைந்தது தெரியுமா? என் நினைவை வைத்து அதனை எழுதுகிறேன்.

*"புல்லரித்துப் போனேனடா தம்பி புல்லரித்துப் போனேனடா....! ஈழத்தின் இரண்டு இலட்சிய மறவர்கள் சாவோலை நீட்டிய வேளையில் சங்கநாதம் இசைத்திருக்கின்றார்கள். மரணச் செய்தி கேட்டும் கலங்காமல் மங்கள ராகம் பாடியிருக்கின்றார்கள்....!"* என்ற சாரப்பட உடன்பிறப்புகளுக்கு அவர் எழுதிய கடிதம் அமைந்திருந்தது என நினைவு.

இந்த நீதிமன்றச் செய்திகளை எழுதி ஆசிரிய பீடத்தில் ஒப்படைத்த எனக்கி அடுத்த நாள் காலையில் பத்திரிகையைப் பார்த்ததும் பேரதிர்ச்சி.

தூக்குத் தண்டனைச் செய்தி முன்பக்கத்தில் தலைப்பாக உள்ளது உள்ளபடி பிரசுரமாகியிருந்தது.

உணர்வு பூர்வமாக, குற்றவாளிக் கூண்டிலிருந்து குட்டிமணி முழங்கிய முழக்கம் தமிழர் தேசம் எல்லாம் பேரதிர்வுகளை ஏற்படுத்தியிருந்த அந்தச் சூழலில், அந்தச் செய்தி 'தினபதி'யின் முன்பக்கத்தில் மேல் அரைப்பாதிக்கு அப்பால் கீழே, சிறிய இரட்டைக் கலச் செய்தியாகப் பிரசுரமாகியிருந்தது.

என்ன தலைப்புத் தெரியுமா?

"தீர்ப்புக்குத் தலைவணங்குகிறேன்; குட்டிமணி தெரிவிப்பு!"

என் பேனா துவண்டு போனதாக நான் உணர்ந்தேன்.

அடுத்த நாள் மாலை சிவநாயகம் ஐயாவோடு மனம் திறந்து பேசினேன். என் மன உணர்வுகளை மதித்து அவர், சில விளக்கங்களைத் தந்தார். அதுவே பத்திரிகைத்துறையில் எனக்கு கீதா உபதேசம் ஆயிற்று. பத்திரிகைத் துறையின் நெளிவு, சுழிவுகளை, உள்சூக்குமத்தை திறந்து பார்க்கும் சந்தர்ப்பம் எனக்கு அன்றுதான் கிட்டியது. இந்தத் துறையில் மூடப்பட்டிருந்த ஒரு பக்கம் அன்றுதான் எனக்குப் புரியலாயிற்று. சிவநாயகம் ஐயாவின் அன்றைய ஆலோசனை அடுத்த 27 ஆண்டுகள் என் பேனாவிற்கு - எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் தந்திரோபாயமாகச் செயற்பட - வழிகாட்டலும் தைரியமும் தந்து நின்றன. அதனை நாளை விவரமாகப் பார்ப்போம்.

(வளரும்.....)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 69

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**207. அந்தத் திகதியில் P - Tom தொடர்பில் நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு தந்தது?**

தீர்ப்பின் திகதி 21 நவம்பர் 2005இற்கு நியமிக்கப்பட்டிருந்தது. அதற்கிடையில் நவம்பர் 2005 இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவற்றில் ‘மஹிந்த சிந்தனை’ நீதிபதிகளிடையேயும் பாய்ந்தது என கருதப்பட்டதால், மனிதாபிமானத்திற்காக எவ்வளவோ பேசியிருந்த நீதியரசர்கள் ஒரு நீண்ட தடையுத்தரவை வழங்கி, ஏற்கனவே ஏற்கப்பட்ட ஒப்பந்தத்தை (P-Tom) முடக்கினார்கள். அப்படியான ஒரு முடக்கத்தை சர்வதேசமும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் அதனை உள்நாட்டின் உரிமை எனக் கருத்து சொல்வதோடு நின்றுவிட்டார்கள்.

**208. நீங்கள் இராமாயணத்தையும், மகாபாரதத்தையும் பற்றிச் சொன்னீர்களே?**

இவற்றைப் புரிந்து கொள்ள இந்த கதாபாத்திரங்கள் உதவுவார்கள். யார் யாருக்கு அவர்கள் பொருத்தம் என்பதை நீங்கள் தீர்மானித்தல் நன்று.

முதலாவது, ஏப்ரல் 2003இல் இருந்து தீர்வு பேச்சுகளினின்றும் விடுதலைப் புலிகள் விலகியிருந்தார்கள். தங்களுக்கு வொஷிங்டன் கூட்டத்திற்கு அழைப்பு தரவில்லை என்ற காரணம்.

இரண்டாவது, மார்ச் 2004 இலிருந்து கருணா, விடுதலைப் புலிகளிலிருந்து பிரிந்து, அரசின் சில பேருக்கு முக்கியமாக – மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பல இராணுவ அதிகாரிகளுக்கும் – செல்லப் பிள்ளையாகி கிழக்கில் அவர்களது ஏற்பாட்டில் விடுதலைப் புலிகளை நிலைகுலைக்க பல தாக்குதல்கள் மேற்கொள்ளுகிறார். விடுதலைப் புலிகளின் தற்பாதுகாப்பு அவர்கள் போர் நிறுத்தத்தை மீறுவதாகச் சொல்லப்படுகிறது.

மூன்றாவது, சந்திரிகாவுக்கும் மஹிந்த தரப்பினருக்கும் கட்சியினுள் பலத்த போராட்டங்கள் அதிகாரத்துக்காக நடக்கின்றன. அதில் ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும், தீவிர சிங்களவாதிகளும் மஹிந்தவை ஆதரித்தனர். சந்திரிகாவுக்குக் கதிர்காமரைப் பிரதமராக்கும் எண்ணமிருந்தது. அதற்குப் பலத்த எதிர்ப்பு மஹிந்த அணியிலிருந்து எழுந்தது. சந்திரிகா தனது நிலையைப் பாதுகாக்க மஹிந்தவைப் பிரதமராக 2004இல் நியமித்தார். அதே நிர்ப்பந்தங்களால் அவரை தனக்குப் பின் ஜனாதிபதிப் பதவிக்கும் கட்சியில் வழி மொழிந்தார்.


நான்காவது, இவ்வளவும் நடந்தபின் மஹிந்த ஜே.வி.பினரோடும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் ஜனாதிபதி தேர்தலுக்காக ஒப்பந்தங்கள் செய்தார். அதில் P-Tom ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது, அது திரும்ப எந்த விதத்திலும் மீளப்படக்கூடாது, விடுதலைப் புலிகளோடு ISGA (இடைக்கால சபை) முறைமை குறித்துப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படக் கூடாது, அதன் அடிப்படையிலான எந்த மாற்று அதிகாரப் பரவல் முறையும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது, அரசாங்கத்தால் ஒஸ்லோவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டாட்சி (Federal) முறை கூட நிராகரிக்கப்பட வேண்டும், ஒற்றையாட்சி முறையே முன்னெடுக்க வேண்டும், நோர்வே விடுதலைப் புலிகளுக்கு சார்பாக நடப்பதனால் அவர்கள் ஏற்படுத்திய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்பன போன்று 12 அம்சங்கள் ஏற்றுக் கைசாத்திடப்பட்டன.

ஐந்தாவது சந்திரிகாவினோடு இருந்த அவநம்பிக்கை தொடர்ந்து அவர் கதிர்காமரை, மஹிந்தா ஜனாதிபதி ஆனாலும் பிரதமர்கள் கட்சிக்குள் முயலுவார் என சந்தேகித்தார்கள். கதிர்காமர் 14 ஒகஸ்ட் 2005இல் கொல்லப்பட்டு, உடனடியாக விடுதலைப் புலிகளின்மேல் பழி போடப்படுகிறது. சந்திரிகாவே பத்திரிகை பேட்டிகளில் விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என சாட்சியங்கள் இல்லாமல் தான் குற்றம் சாட்டமாட்டேன் என்கிறார். ஆனாலும் இரண்டு நாள்களின் பின் சாட்சியங்களின் அடிப்படையில் ஏதுமின்றி விடுதலைப் புலிகள் தான் அதை செய்திருக்கலாம் என்று கூற வைக்கப்பட்டார். வேறுபல வழிகளில் இது அரசிற்குள்ளேயே இராணுவ உதவிகளோடு நடத்தப்பட்டது எனவும் கருதப்பட்டது.

ஆறாவது, மஹிந்தா பேச்சளவில் வடக்கு, கிழக்குக்குக்கு சுயாட்சி தருதாகக்கூறி, ‘மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி’ என்று டக்ளஸுடன் ஒப்பந்தம் செய்தார். தான் பதவிக்கு வந்தால் கருணா கவனிக்கப்படுவார் என உறுதியளித்தார்.

ஏழாவது, பசில் ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாயிருந்த பத்திரிகை முதலாளிகள், செய்தி நிருபர்களிடமெல்லாம் சந்திரிகாவுக்கு சமாதானத்தை கொண்டு வர இவ்வளவு காலம் தந்தீர்கள், மஹிந்த பிரதமராக வந்தே சில மாதங்கள்தான் ஆகின்றன, ஆகவே அவர் ஜனாதிபதியாக ஒத்துழையுங்கள், எங்களுக்குள்ளேயே பேசித் தீர்க்கலாம் என்று பேச்சுவார்த்தைகள் தொடங்கினார்.

இந்தப் பத்திரிகையாளர்கள் எல்லாம் பிரேமதாஸ நாள்கள் மாதிரி ஒரு உள்நாட்டு தேனிலவு காலத்தை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தினர். பின்னர் பஸிலூடாக விடுதலைப் புலிகளுக்கு பணப்பரிமாற்றம் நடந்ததாக தகவல்கள் இருந்தன. பஸில், தமிழர்கள் ஒத்துக் கொண்டால் ஜே.வி.பியின் வாக்கு வலிமை ஒரு பொருட்டல்ல என்று கணக்குகள் சொன்னார். அவையெல்லாம் தேர்தலுக்கான கூட்டுக்கள். நிரந்தரமானவை அல்ல. எங்களது சகோதரப் பிரச்சினை தீர்ந்தால், அவர்கள்(ஜே.வி.பி.) ஒரு பொருட்டல்ல என்றார்.




**209. மஹிந்த ஜே.வி.பியினரோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பின்னும் விடுதலைப் புலிகள் அவரை ஜனாதிபதியாக விட்டார்களா?**

தாங்கள் ஆதரவு தருவதாகச் சொல்லி விடுதலைப் புலிகள் அறிக்கைகள் தரவில்லை. பணம் பரிமாற்றப்பட்டதாக செய்திகள் இருந்தன.

விடுதலைப் புலிகள், இது ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கான போட்டி, நாம் இதில் ஈடுபடபோவதில்லை, எனவே தமிழ் மக்களை வாக்குகளை செலுத்தக்கூடாது என கட்டளையிட்டார்கள். சொற்ப விகிதத்தில் மஹிந்த வெற்றி பெற்றார்.

**210. அதனை விடுதலைப் புலிகள் ஏன் செய்தனர்?**

அது அவர்களுக்கும், அவர்களை வழி நடத்திய புத்திஜீவிகளுக்கும் தான் தெரியும். மிலிந்த மிலிகொட அந்த நாள்களில் பல ஐரோப்பிய, அமெரிக்க சுற்றுப் பயணங்கள் செய்தார் என்பதும் பல புலம்பெயர்வாளர்களையும் சந்தித்தார் என்பதும் செய்திகள்.

**211. விடுதலைப் புலிகள் எதிர்க்கட்சித் தலைவரும் எதிரணி வேட்பாளருமான ரணிலுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவில்லையா?**

முதலில் இல்லை. ரணில் கூட விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளுக்குப் போகவில்லை. தான் தீர்வு திட்டத்திற்கு தரும் ஆதரவால், தமிழ் மக்கள் தனக்கு வாக்களிப்பார்கள் என எண்ணினார். கடைசி நேரத்தில் விடுதலைப் புலிகளுடன் பத்திரிகை நிருபர்கள் மூலம் தொடர்பாடல் வைத்த போதும் – கடைசி நேரத்தில் சில நிபந்தனைகளின் பேரில் தேர்தல் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு இணங்கி, இறங்கி வருவதற்கு புலிகள் சம்மதித்த போதும் – அவர் தனக்கு சிங்கள பகுதிகளில் நல்ல ஆதரவுகள் உள்ளதால், அந்த வாக்குகளிலேயே தாம் தனித்து வெல்ல முடியும் எனக் கணக்கிட்டு, விடுதலைப் புலிகளுடன் தேர்தல் ஒப்பந்தத்திற்கு போக வேண்டிய தேவையில்லை என விட்டுவிட்டார். ஆனால் விடுதலைப் புலிகள் பஸில் ராஜபக்ஷவோடு வைத்திருந்த திட்டத்தை அவர் அறிந்து கொள்ளவில்லை.

**212. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக, அவருடைய குடும்பமும் குழுவும் அதிகாரத்துக்கு வருவது, தீர்வு பேச்சுக்களை பாதிக்கும் என அறியப்பட்டதா?**

நன்கு அறியப்பட்டது. தமிழர் விடுதலைக்காகப் போராடிய டக்ளஸ், கருணா போன்றோரே கம்பளம் விரிக்கிறார்கள். விடுதலைப் புலிகள் புற்பாய் போடுகிறார்கள். அவர் உள்நாட்டுக்குள்ளேயே பேசித்தீர்ப்போம் என்று தகவல்கள் சொல்லுகிறார். மஹிந்த சிந்தனைகளில் நாடு சுபீட்சைத்தை நோக்கி போகுமென்பவர், தன்னைப் பொறுத்த வரையில் புலிகளை முற்று முழுதாக அழிப்பதென்பதை தீர்வாக நினைத்திருந்தார்.

பாரதி பாடிவிட்டு போனான்.

*“நெஞ்சில் உரமுன்றி நேர்மைதிறனுமின்றி*
*வஞ்சனைகள் சொல்வாரடி கிளியே*
*வாய்(த்த) சொல்லில் வீரடி*
*சொந்தச் சகோதரங்கள் துன்பத்தில் சாதல் கண்டும்*
*சிந்தனை இரங்காரடி கிளியே, செம்மை மறந்தாரடி*
*மானம் சிறிதுதென்றெண்ணி வாழ்வு பெரிதென*
*நினைத்து, ஈனார்க்குலம் தன்னில் கிளியே இருக்க நிலையுண்டோ?”*

**213. தீர்வு பேச்சுவார்த்தைகளுக்கு அவரின் திட்டம் என்ன?**

பாரதி சொல்லியபடி வாய்(த்த) சொல்லில் பேசிவிட்டு நெஞ்சில் அழிப்பே இருந்தது. அதற்கு துணையாக இராம பக்த அனுமான்கள் இருந்தார்கள்; எங்களிடையே கூட.

தீர்வு பேச்சுக்களில் நடந்தவற்றைப் பார்த்தால், சந்திரிகா, விடுதலைப் புலிகள் ஒரு நியாயமான தீர்வுத் திட்டத்தை ஏற்காவிடின், அவர்களைப் பலவீனப்படுத்தியாவது ஒரு விரிவான தீர்வை தமிழர்களுக்கு அவர்கள் தங்கள் பகுதியை மீள் உருவாக்க தருவதற்கு முன்வந்தார்.

அவை எந்த வடிவிலமையலாம் என்பதை முன்னரே அவரும், கதிர்காமரும், ஜீ.எல்.பிரிஸும், நீலன் திருச்செல்வமும், பாலசிங்கமும் நோர்வேயுடன் பேசியிருந்தனர்.

ரணில் எப்பொழுதுமே கூட்டாட்சி (Federal) பற்றி பேசுவார். ஆனால் காற்றடிப்புக்கு ஏற்ப பட்டம் விடுவதில் கெட்டிக்காரர். ஐக்கிய தேசியக் கட்சியில் இனப் பிரச்சினைக்கு கூட்டாட்சி முறையே தீர்வு என்று தீர்மானம் நிறைவேற்றி, பின் அதனைக் கட்சிகாரானரான டி.எம். சுவாமிநாதன் கொண்டு எதிர்தீர்மானத்தால் அகற்றி, கட்சியிலுள்ள தமிழர்களே விரும்பவில்லை என்று சொல்லிய கெட்டிக்காரன். அவர் ஒரு படிப்படியான முறை யில் பிரச்சினைகள் இல்லாத விடயங்களை பேசி, முக்கியமான தீர்வுத் திட்டங்களை இழுத்துப் பின்னடித்து, மேற்குலக நாடுகளுக்குத் தான் தீர்வு கொண்டு வருவார் என்ற நம்பிக்கையைக் கொடுத்து, விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தைகளை படம் பிடித்து, அவர்களிடம் பணம் பெற்று, தென்பகுதிகளை வளப்படுத்துதலில் குறியாயிருந்தார். அதற்கு வசதியாக, வொஷிங்கடன் கூட்டத்திற்கு புலிகளை அழைக்காததை அது அமெரிக்கா சம்பந்தப்பட்ட விடயம் என்றும் கூறி, ஜப்பான் பேச்சுவார்த்தைகளுக்கும் காய் வெட்டி விட்டார்.

ஆனால் மஹிந்தாவோ பேசியது எதுவானாலும், முன்னர் பேச்சு வார்த்தையில், ஏற்கப்பட்ட எல்லா நல்லுறவுகளையும், நல்லெண்ணங்களையும் வெட்டி எறிந்து, இது இனப் பிரச்சினை அல்ல, இது ஒரு பயங்கரவாத பிரச்சினை, அதற்கு முதலில் இராணுவத் தீர்வு காணப்பட வேண்டும், அதை தொடர்ந்து தேவைப்படுமளவு அரசியல் தீர்வுகளை மேற்கொள்ளலாம் எனப் புதுக்கதை பேசி அதனைத் தீர்வு மேசையில் வைத்தார்.

(வளரும்........)

# Construct Passive Sentences in Perfect tense

The format of constructing sentences in passive is object + has/have + been. V3 past participle) + subject

Eg: I have prepared a cup of tea (active voice)

**Subject :** I
**Be verb :** have
**Verb :** Prepared
**Object :** a cup of tea

A cup of tea has been prepared by me (passive voice)

**Step 1:** write the object.
**Step 2:** If it is singular so we should add 'has', if it is plural we should add 'have'. Moreover 'have' is used for I.
**Step 3:** Then write 'been'
**Step 4:** Write the V3 (past participle) of verb.
**Step 5:** Write 'by' and subject.

**Let's practise.**

1. They have grown some ducks.
2. He has collected some stamps.
3. Someone has stolen my pen.
4. The police have arrested the thief.
5. Somebody has found the missing boy.
6. I have written a letter.
7. The postman has delivered the letters.
8. They have broadcasted the election results.
9. Some one has damaged all the artides.
10. The judge has discharged the accused.

**Answers**

1. Some ducks have been grown by them.
2. Some stamps have been collected by him.
3. My pen has been stolen by someone.
4. The thief has been arrested by the police.
5. The missing boy has been found by somebody.
6. A letter has been written by me.
7. The letters have been delivered by the postman.
8. The election results have been broadcasted by them.
9. All the articles have been damaged by someone.
10. The accused has been discharged by the judge.

**Vinuja Sivananthan**
**2023 A/L Bio**
**Kn/Pallai Central College.**

# Can you guess the answers to these riddles?



01. What has to be broken before you can use it?
02. I'm talh when I'm young and I'm short when I'm old. what am I?
03. What goes up but never comes down?
04. I have branches, but no fruits, trunk or leaves. what am I?
05. It belongs to you, but your friends use it more. what is it?
06. Kate's mother has three children Snap, Crackle and a
07. If you don't keep me, I'll break. a what am I ?
08. What starts with a P, ends with an" and shadi thousands of letters?
09. What are two things people never eat before breakfast ?
10 What has faux legs and only one foot?



**Answers.**

1. An egg
2. A candle
3. Age.
4. A bank.
5. Name.
6. Kate.
7. A promise.
8. Post office
9. Lunch and Dinner.
10. Bed.

**Pukalarasi Rubenthiran.**
**Grade -7**
**Kn/ Pallai Central College.**

# LET'S CHANGE THE TENSES IN REPRORTED SPEECH

**(2) PRESENT PERFECT 8 PAST PERFECT**

EG:

**Eg:** Jegan said "I have won a prize in this competition."
⏩ Jegan said that he had won a prize in this competition.

The way of writing the reported speech
- First, we write the subject pronoun (He, She, They, Teacher)
- Then we put reporting verb (said, ordered) and that also.
- Then write the changed pronoun (he, she, them).
- Then write had (has/have ⏩ had) + V3 (watched, eaten).
- Finally write the object, propositions, etc.
- [NOTE: If, there pronouns are identified in direct speech, we want to change that when we writing the reported speech. (now ⏩ then, ago ⏩ before)]


**EXERCISE**

a. Latha: "I have not met her."
b. Mother: "Dad has made a breakfast."
c. Varuni and Vithu (to me): "We have cleaned the science laboratory."
d. Athi: "I haven't watched movies since 2010"
e. Nakul: "Vani has collected the articles about 'Ponniyin Selvan' story."
f. Ken: "I have visited Paris five times."
g. Dad: "The bridge has broken down."
h. My friend: "I have seen 'Annabelle' movie."
i. Teacher: "I have some work today."
j. I (to my sister): "I have eaten all chocolates."

**ANSWERS**

1. Latha said that she had not met her.
2. Mother said that dad had made a breakfast.
3. Varuni and Vithu said me that they had cleaned the science laboratory.
4. Athi said that he hadn't watched movies since 2010.
5. Nakul said that Vani had collected the articles about "Ponniyin Selvan' story.
6. Ken said that he had visited Paris five times.
7. Dad said that the bridge had broken down.
8. My friend said that she had seen 'Annabelle' movie.
9. Teacher said that she had some work that day.
10. I said to my sister that I had eaten all chocolates.

**Subeedahana Jeyakanth**
**2023 A/L Bio**
**Kn/Pallai Central College.**



# BEST PRACTICES


Good morning! Dear president, teacher in charge, members of English literary association and my dear friends.it is pleasure to speak in front of you all on ''best practices for a student ". Best Practices are the practices in our day to day life for a better life.


Best Practices are the practices which help us .For example wake up on time is a best practices which help us to finish our work time before everyone else. There is a famous saying ''Early bird catch the worm''.


As we all are students we must learn best practices. Such as Punctuality, Generous, Obeying the elders, Physical and mental fitness and Continuous learning etc. in order to live a success life. Our school environment help us to do soul. Best practices are the key to live a better life. Punctuality will never let us to miss anything in our life. Because if we are on time nothing will be lost. Based on famous saying ''Help given is help taken''. We must be generous in order to life a happiest life with our friends.

So my dear students we all must learn the best practices from school for a better life. Thank you all for this wonderful opportunity.

**Suvethini Jeyakumar**
**Grade-10**
**Jaffna Vembadi Girls Hige School**
**ATC-Inuvil**







## Solid

A solid's particles are arranged regularly and packed together tightly. These particles can only vibrate, they cannot move around. They have strong attraction forces between the particles.

## Liquid

Liquid particles' are loosely packed together. They are still touching each other, but there are gaps, which allow the particles to move around each other. so the particle arrangement will also be random.

## Gases

Gas particles just move randomly at high speed in every direction. The particles are so far apart that there is little to no forces of attraction between them.

# Interconversion between States of Matter

MELTING - SOLID TO LIQUID
1. Particles gain more energy from the heat source
2. Particles vibrate faster & faster
3. The forces of attraction will weaken, allowing particles to move around each other
4. The solid has 'melted' into a liquid. The tempera ture at which this happens is called the melting point.

FREEZING - LIQUID TO SOLID
1. Liquid is cooled
2. Particles lose energy and move slower & slower
3. Forces of attraction will become strong enough to hold these particles together.

Preyan Anuraj
Grade 10
Gateway College
www.precoolskillz.com

BOILING - GAS TO LIQUID
1. All particles are involved
2. There are bubbles
3. Boiling happens at a fixed temperature called the ' boiling point'

EVAPORATION - GAS TO LIQUID
1. Only theparticles in t he surface are involved
2. There are no bubbles
3. Happens at a different temperatures

SUBLIMATION - SOLID TO GAS
When an object has a melting & boiling point so close, the solid turns into a gas straight away, avoiding the liquid state. The opposite of this, is called deposition or de-sublimation. An example of an object that sublimes.

# Waste Management



Due to the massive increase in the population, the amount of waste generated gradually increase day by day. Many people's lives are at risk due to the inappropriate waste management. Mostly many poor people beside the slums are very close to the waste disposal area. Therefore, there is a massive danger about various diseases. In order to maintain a healthy and hygienic life , waste management is mandatory.

Waste management is the management of waste by disposal method or recycling method. There are many ways that we can take measures for the waste management. Some of them are Recycling, composting. Here recycle comes under the major division called as the 3R method which includes Recycle, Reuse, Reduce. Composting is a major method that cause help to humans for waste management and cause as a good fertilizer for plants .Composting is converting of organic waste into fertilizers.

There are many advantages of waste management , such as it decreases bad odor, reduces the pollution, reduces the production of waste, it generates many works employment such as officers responsible for the wastes and etc... According to the economical level of countries waste management is necessary because it can save the amount of money of country for the adverse effects such as disaster and diseases.

Finally in my conclusion, I conclude that Waste management is an important issue that needs government action quickly.

J.Sailajan
St.John's College Jaffna,

Learning English by reading newspapers is a good habit. Newspapers are reliable source to expand your English vocabulary. It can also improve your spoken English as you read aloud the articles. We are publishing articles every Sunday to accelerate the English Language skills of school children in this outbreak.

**Articles are welcomed from school children and they can be emailed to kalaikkathiredu@gmail.com**

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

**தரம் - 6** | **கணிதம்** | **அலகு 13**

## தசமம்

**தசமம் அறிமுகம்**

பின்னத்தில் பகுதி எண் 10, 100 உள்ள பின்னங்களை தசம தானத்தில் அறிவோம். 1/10 = 0.1, 54/100 = 0.54 இவ்வாறு உள்ள தசம எண்களை

1.தசம எண்களை சொற்களில் எழுதும் முறை.
2.தசம எண்களை எண்சட்டத்தில் குறிக்கும் முறை.
3.தசம எண்களை எண்கள் உள்ள இடப்பெறுமானம், பெறுமானம். என்பவற்றை தசம எண்களின் அறிமுகத்தினூடாக அறிவோம்.

* தசம எண்களில் குறிக்கப்படும் இலக்கத்தின் இடப்பெறுமானம், பெறுமானம் என்பவற்றைக் காணல்

65.84 இங்கு
8 இன் இடப்பெறுமானம் முதலாம் தசமதானம்.
8 இன் பெறுமானம் 0.8 ஆகும்.
4 இன் இடப்பெறுமானம் இரண்டாம் தசமதானம்.
4 இன் பெறுமானம் 0.04 ஆகும்.


* தசம எண்களை சொற்களில் எழுதும் முறை.

65.84 – அறுபத்தைந்து தசம் எட்டு நான்கு.
72.05 – எழுபத்திரண்டு தசம் பூச்சியம் ஐந்து.
56.43 – ஐம்பத்தாறு தசம் நான்கு மூன்று.
0.58 – பூச்சியம் தசம் ஐந்து எட்டு.

இவ்வாறு தசம எண்களை சொற்களில் எழுதும் போது தசத்திற்கு இடதுபக்கமாக உள்ள தனித்தனி இலக்கமாக எழுதப்பட வேண்டும்.

* தசம எண்களை எண்சட்டத்தில் குறித்தல்

65.84 45.05




01.பின்வரும் தசமதான எண்களை சொற்களில் எழுதுக

1. 24.62
2. 345.05
3. 45.2
4. 7005.23
5. 8940.09
6. 25.74
7. 59.64
8. 589.58
9. 864.15
10. 856.09

2.பின்வரும் தசமதான எண்களை எண்சட்டத்தில் குறிக்குக

1. 65.74
2. 60.02
3. 34.85
4. 24.87
5. 5.26
6. 19.54
7. 54.84
8. 27.08
9. 24.04
10. 8.05

3.கீழே உள்ள அட்டவணையை நிரப்புக.

| தசமதான எண்கள் | குறிக்கப்பட்ட இலக்கம் | இடப்பெறுமானம் | பெறுமானம் |
|---|---|---|---|
| 548.24 | 2 | ............ | .............. |
| 602.75 | 7 | ............ | ............... |
| 864.02 | 2 | ............ | ............... |
| 623.07 | 7 | ............ | ............... |
| 63.24 | 2 | ............ | ............... |

* தசமங்களை ஒப்பிடல்

01. 1) 0.4 0.6

இதனை முதலில் பின்னமாக மாற்றுக

$\frac{4}{10}$ $\frac{6}{10}$

இவற்றில் $\frac{4}{10} < \frac{6}{10}$

ஆகவே 0.4 < 0.6

02. 0.75 0.64

இதனை முதலில் பின்னமாக மாற்றுக.

$\frac{75}{100}$ $\frac{64}{100}$

இவற்றில் $\frac{75}{100} > \frac{64}{100}$

ஆகவே 0.75 > 0.64

03. 0.8 0.94

இதனை முதலில் பின்னமாக மாற்றுக

$\frac{8}{10}$ $\frac{94}{100}$

இதனை பகுதி எண் சமனான பின்னமாக மாற்றுக

$\frac{80}{100}$ $\frac{94}{100}$

இவற்றில் $\frac{80}{100} < \frac{94}{100}$

ஆகவே 0.8 < 0.94

4.பின்வரும் தசம எண்களை <, >, = பொருத்தமான குறியீடுகளை இடுக

1. 0.8 ......... 0.7
2. 0.84....... 0.35
3. 0.56....... 0.6
4. 0.4 ......... 0.68
5. 0.25....... 0.29
6. 0.5 ........ 0.50
7. 0.48......... 0.38
8. 0.65......... 0.56
9. 0.1........... 0.10
10. 8.65....... 8.68

5.பின்வரும் தசம எண்களை ஏறுவரிசையில் எழுதுக

1) 0.8, 0.45, 0.64, 0.05, 0.5 ......................................
2) 0.78, 0.48, 0.79, 0.45, 0.9 ...................................

6.தசமங்களின் கூட்டல்

**முதலாம் தசமதான கூட்டல்**

உ+ம் 1) 0.3 + 0.4 = 0.7 2) 0.6 + 2.8 = 3.4

**இரண்டாம் தசமதான கூட்டல்**

உ+ம் 1) 0.05 + 0.56 = 0.61 2) 2.48 + 3.07 = 5.55

**முதலாம் தசமதான, இரண்டாம் தசமதான கூட்டல்**

உ+ம் 1) 5.6 + 2.74 = 8.34 2) 6.05 + 9.4 = 15.45

**வசனப் பிரசினத்தில் உள்ள தசமதான கூட்டல்**

உ+ம்

1.கமலிடம் தன்னிடமுள்ள சம்பளத்தில் 0.24 பங்கினை உணவிற்கும், 0.07 பங்கினை போக்குவரத்திற்கும் செலவழித்தான். எனின் அவன் செலவழித்த மொத்தப் பங்கு யாது?

உணவிற்காக செலவழித்த பங்கு = 0.24
போக்குவரத்து செலவழித்த பங்கு = 0.07
மொத்த செலவழித்த பங்கு = 0.24 + 0.07
= 0.31

2.அமலனின் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்ல பயணித்த முறைகள் 0.5 பங்கு துவிச்சக்கரவண்டியிலும், 0.06 பங்கு நடையிலும் சென்றான் எனின் அவன் வீட்டிலிருந்து பாடசாலைக்குச் சென்ற துவிச்சக்கரவண்டி, நடையில் சென்ற மொத்தப் பங்கு யாது?

துவிச்சக்கரவண்டியில் சென்ற பங்கு = 0.5
நடையில் சென்ற பங்கு = 0.06
மொத்த பங்கு = 0.5 + 0.06
= 0.56

பின்வரும் தசமதான எண்களை கூட்டுக

1) 0.7 + 0.2 =..................
2) 0.64 + 0.47 = ..............
3) 4.65 + 5.7 = ................
4) 8.04 + 6.2 = ................
5) 8.08 + 3.47 = ............
6. 5.4 + 4.8 = ...............
7. 4.05 + 2.4 = ..............
8. 6.84 + 6.09 = .............
9. 5.07 + 4.06 = ............
10. 8.64 + 9.78 = .............

7.பின்வரும் வசனபிரசினத்தில் உள்ள தசமதான எண்களை கூட்டுக

1.ஒரு நீர்த்தாங்கியில் ஆரம்பத்தில் நீரின் பங்கு 0.45 உள்ளது. பின் சேர்க்கப்பட்ட நீரின் பங்கு 0.32 ஆகும். நீரின் தற்போது உள்ள பங்கு யாது?

2.ஒரு வயலில் 0.28 பங்கு பயிற்றம் விதை பயிரப்பட்டுள்ளது. 0.5 பங்கு உழுத்தம் விதை பயிரப்பட்டுள்ளது எனின் வயலில் பயிரப்பட்ட மொத்தப் பங்கு யாது?

3.ஒரு பாடசாலையில் ஆண் மாணவர்களின் எண்ணிக்கை 0.2. பெண் மாணவிகளின் எண்ணிக்கை 0.4. எனின் அப் பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

8.தசமதான கழித்தல்

**முதலாம் தசமதான எண்களை கழித்தல்**

உ+ம் 1) 0.8 - 0.4 = 0.4 2) 1.2 - 0.4 = 0.8

**இரண்டாம் தசமதான எண்களை கழித்தல்**

உ+ம் 1) 0.86 - 0.54 = 0.32 2) 7.04 - 4.58 = 2.46

**முதலாம், இரண்டாம் தசமதான எண்களை கழித்தல்**

உ+ம் 1) 2.5 - 1.48 = 1.02 2) 3.64 - 2.4 = 1.24

**வசனப்பிரசினத்தில் உள்ள தசமதான கழித்தல்**

உ+ம்

1.ஒரு புத்தகசாலையில் கதைப்புத்தகங்களின் எண்ணிக்கை 0.54 ஆகும். தமிழ் கதைப்புத்தகங்களின் எண்ணிக்கை 0.25 ஆகும். ஆகவே ஆங்கில கதைப் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

கதைப்புத்தகங்களின் எண்ணிக்கை = 0.54
தமிழ் கதைப்புத்தகங்களின் எண்ணிக்கை = 0.25
ஆங்கில கதைப்புத்தகங்களின் எண்ணிக்கை = 0.54 - 0.25
= 0.29

2.ஒரு பழக்கடையில் மாம்பழங்களின் எண்ணிக்கை 0.7 ஆகும். பழுதடைந்த மாம்பழங்களின் எண்ணிக்கை 0.28 ஆகும். பழுதடையாத மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

மாம்பழங்களின் எண்ணிக்கை = 0.7
பழுதடைந்த மாம்பழங்களின் எண்ணிக்கை = 0.28
பழுதடையாத மாம்பழங்களின் எண்ணிக்கை = 0.7 - 0.28
= 0.42

பின்வரும் தசமதான எண்களின் கழித்தல்

1) 8.6 - 4.8 = ................
2) 3.45 - 2.08 = ................
3) 5.7 - 4.07 = ..................
4) 0.84 - 0.5 = ...................
5) 8.47 - 7.84 = .................
6) 5.74 - 5.31 = .................
7) 4.48 - 2.75 = .................
8) 8.74 - 5.68 = ..................
9) 6.58 - 2.09 = ..................
10) 5.65 - 4.68 = .................

9.பின்வரும் வசனப்பிரசினத்தில் உள்ள தசமதான எண்களை கழித்தல்

1.அரவிந் என்பவர் தனது ஆரம்பத்தில் சம்பளத்தில் பணம் 0.85 இருந்தது. அவர் தனது கல்விச் செலவு செய்த பணம் 0.38 ஆகும். எனின் தற்போது அரவிந்திடம் உள்ள சம்பளம் யாது?

2.ஒரு நீர்த்தாங்கியின் ஆரம்பத்தில் உள்ள நீரின் அளவு 0.75 ஆகும். பூந்தோட்டத் திற்காக திறந்துவிடப்பட்ட நீரின் அளவு 0.39 ஆகும். எனின் தற்போது நீர்த் தாங்கியில் உள்ள நீரின் அளவு யாது?

3.ஒரு பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை 0.8 ஆகும். இதில் பெண் மாணவிகளின் எண்ணிக்கை 0.53 ஆகும். எனின் ஆண் மாணவர்களின்

**ஆக்கம் : திரு. சற்குணராசா செந்தூரன்**
**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**
**யா/தேசிய கல்வியியற் கல்லூரி**
**வழிகாட்டலும் ஆலோசனையும் - திருமதி. சுதர்சினி விக்னமோகன்**
**விரிவுரையாளர், யா/தேசிய கல்வியியற் கல்லூரி**

# கொத்தலாவல பாதுகாப்பு பல்கலை சட்டமூலம் மீண்டும் நாடாளுமன்றில்

## விமல் திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 18

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலம் நாடாளுமன்றில் மீண்டும் முன்வைக்கப்படும் என தான் எதிர்பார்க்கிறேன் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த அவர் –

அமைச்சரவை குழு கோரியதை அடுத்து குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என கூறினார்.

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் தனியார் பல்கலைக் கழகமாக அல்லாமல் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக வகைப்படுத்தப் பட்டது என்றும் அமைச்சர் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார்.

ஆகவே, நிறுவனத்திற்குள் இயற்றப்பட்ட சில சட்டங்கள் ஒரே சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் இதற்குத் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப் படும் என்றும் கூறினார்.

## ஐஸ் மற்றும் கேரளா கஞ்சாவுடன் நால்வர் வாழைச்சேனையில் கைது

வாழைச்சேனை கறுவாக்கேணி வீதி செம்மணோடையில் வைத்து ஐஸ் மற்றும் கேரளா கஞ்சாவுடன் நான்கு பேர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர் என வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை காகித ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய வாழைச்சேனை பொலிஸாரோடு இணைந்து மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே மேற்படி நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து ஐஸ் போதைப் பொருள் 30,550 மில்லி கிராமும் கேரளா கஞ்சா 500 மில்லிகிராம் என்பன கைப் பற்றப்பட்டதுடன் இந்த வருடத்தில் வாழைச் சேனை பொலிஸ் பிரிவில் கைப்பற்றப்பட்ட அதி கூடிய ஐஸ் போதைப்பொருள் இது என்பது குறிப்பிடத்தக்கது.

சந்தேக நபர்கள் நால்வரில் 45 வயதுடைய இருவரும் 44 மற்றும் 40 வயதுடையவர்கள் என்றும் தெரிவித்த பொலிஸார், இவர்கள் ஓட்டமாவடி, செம் மண்ஓடை, பிறைந்துறைச்சேனை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் பிரபல போதைவஸ்து வியாபாரிகள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி: தேசிய பொறிமுறை அமைக்க வேண்டும்

### பேராசிரியர் பிரதீபா மஹானாமஹேவா கருத்து

உண்மை மற்றும் நல்லிணக்க நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். அத்துடன் மனித உரிமை விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய மனித உரிமை செயலணி ஒன்று அவசியமாகும்.

குறிப்பாக மனித உரிமை தொடர்பாக அமைச்சரவை அமைச்சர் மிகவும் முக்கியமாகும். அதனூடாகத்தான் எமது நடவடிக்கைகளை சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்லலாம். அதேபோன்று சனல் 4 காணொலியின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை மனித உரிமை பேரவை அமைக்கவேண்டும் என பேராசிரியர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்தார்.

கடந்த 30 வருட காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய உயர் நீதிமன்ற நீதியரசர் துலிப் நவாஸ் தலைமையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி விசாரணைக்குழுவுக்கு முன்னால் நேற்று சனிக்கிழமை சாட்சியமளிப்பதற்காக பேராசிரியர் பிரதீபா மஹானாம ஹேவா அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் ஆணைக்குழுவில் சாட்சியமளித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

## இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 07 | கணிதம் | அலகு - 12

### அட்சரகணிதக் கோவைகள் - விடைகள்

01)

| | கோவை | கோவையிலுள்ள தெரியாத கணியம் | தெரியாக் கணியத்தின் குணகம் | கோவையிலுள்ள உறுப்புக்கள் | உறுப்புக்களுடன் தொடர்புபட்ட கணிதச் செய்கைகள் |
|---|---|---|---|---|---|
| | 3a + 5 | a | 3 | 3a + 5 | X, + |
| | 2x | x | 2 | 2x | X |
| 1. | 2b - 3 | b | 2 | 2b,3 | x,- |
| 2. | 11z | z | 11 | 11z | x |
| 3. | 20 - 9m | m | -9 | 20,9m | -,x |
| 4. | P - 10 | p | 1 | p,10 | - |
| 5. | a + 2 | a | 1 | a, 2 | + |

02)

1. 1/2 a + 4
2. 2m + 15
3. 5a

03)

2. 7x + 5y +7
3. 5x +2y +7
4. 3a + 6b + 7
5. 8x + 9k + 9
6. 7P + 5q

04)

2. 35
3. 7
4. 13
5. 24



## பொது அறிவு
## தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக் கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.
சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் **Kalaikkathiredu@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**01.ஒரே இடத்தில் இருந்து கார்,வான் என்பன $20ms^{-1}$,$10ms^{-1}$ என்ற மாறா வேகத்துடன் ஒரே திசையில் பயணத்தை தொடங்குகின்றன. 1 நிமிடத்தின் பின் இவ் இரண்டுக்கும் இடையிலான தூரம் யாது?**
**02. தமிழ் மாதமான ஆனியில் எத்தனையாம் திகதியுடன் மாதம் முடிவடையும்?**
**03.ஒரே இடத்தில் ஒய்விலிருந்து பஸ்,மோட்டார் என்பன எதிர்த்திசையில் $2ms^{-2}$ $3ms^{-2}$ என்னும் மாறா ஆர்முடுகலுடன் இயங்க தொடங்குகின்றன 30 செக்கனின் பின் இரண்டுக்கும் இடையிலான தூரம் யாது?**
**04. காலைக்கதிர் பத்திரிகையில் ஒரே நாளில் வெளியாகும் பதிப்புகளின் எண்ணிக்கை யாது? அவை எவை?**
**05. இந்தியாவின் மிக உயர்ந்த இலக்கிய விருது எது?**
**06. உலகிலேயே மிகப்பெரிய நூலகம் எங்கு உள்ளது?**
**07.சருமத்தின் மீதுள்ள நிறத்திற்கு காரணம் யாது?**
**08. பழங்காலத்தில் 'சேரன்தீவு' என அழைக்கப்பட்ட நாடு எது?**
**09. 'ஜனநாயகம்' என்ற அரசியல் தத்துவத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் யார்?**
**10. 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' எனும் பாடலின் ஆசிரியர் யார்?**

பெயர் :- ............................................................
முகவரி :- ............................................................
தொலைபேசி இலக்கம்:- ............................................
அடையாள அட்டை:- ..................................................
மின்னஞ்சல் முகவரி:- ...............................................

# நமக்கான சிறந்த அடையாளம்



வாழ்க்கையில் எல்லோருமே அங்கீகாரம் மற்றும் பொருள் தேடி ஓடிக்கொண்டிருக்கிறோம். நமக்கான சிறந்த அடையாளத்தை, மற்றவர்கள் போற்றத்தக்க, நினைத்துப் பார்க்கத்தக்க அடையாளத்தை உருவாக்க, முடிந்த அனைத்தையும் செய்கிறோம். மற்றவர்களின் அங்கீகாரம், மற்றவர்களின் பாராட்டுதல்களை நான் எதிர்பார்ப்பதில்லை என வெகு சிலர் கூறினாலும், தங்களை விட உயர்ந்த அறிவும், வாழ்வின் பார்வைத் தெளிவும் கொண்டோர் பாராட்டும் போது, தனது திறனை அங்கீகரிக்கும் போது, மன மகிழ்வையும் திருப்தியையும் உணரவே செய்வார்கள்.

பொருள் தேடல் என்பது வாழ்வின் உந்து சக்தி. பொருளாதார ரீதியில் உயரவேண்டும் என்கிற எண்ணம் எவருக்கும் இயல்பானது. இந்த உலக ஆண்கள் அனைவருமே மண்ணுக்கும் பெண்ணுக்கும் பொன்னுக்கும் தான் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ‘இருப்பதை வைத்து நிம்மதி கொள்வோம், சும்மா இருப்பதே சுகம்’ என்றெல்லாம் தத்துவங்கள் கூறினாலும், பொருளாதார வயப்பட்ட உலகக்ஷ்; சூழலில், பொருள் சேர்ப் பதும், சுய மதிப்பை உயர்த்துவதும் அனைவரின் நோக்கமாகவே உள் ளது.

வாழ்வில் திருப்தி என்பது ஆளுக்கு ஆள் மாறுபடும். சிலர் எளிய வாழ்வில், மாதம் பத்தாயிரம் ரூபா வருமானத்துடன் திருப்தி அடையலாம். சிலருக்கு மாதம் கோடி ரூபா வருமானம் கிடைத்தாலும் திருப்தி இல்லாது போகலாம். இது அவரவர் வாழ்வை அணுகும் முறை சார்ந்து மாறுபடும். அது போலவே, வாழ்க்கையில் திருப்தியை உணர் வதற்கான காரணிகள் எல்லோருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை.

உலகளவிலான திறந்த பொருளாதாரமும், நவீன நுகர்வு சாதனங்களும், வசதிகளும், திருப்தி என்கிற நிலையை அதிகமும் மாற்றிப் போட்டுள்ளன. இருபது வருடங்களுக்கு முன்பு, அலை பேசி என்பது ஆடம்பர பொருளாக, வசதியானவர்களுக்கானதாக இருந்தது. தற்போது சாமானிய மக்களும் அலைப்பேசி பயன்படுத்தும் நிலைக்கு வாழ்க்கை மாறிவிட்டது. சொல்லப்போனால் அன்றாட வாழ்க்கைக்கான அத்தியாவசிய பொருளாக மாறிவிட்டது.


கல்விக் கட்டணங்களுக்கு அடுத்தபடியாக, நுகர்வு சாதனப் பொருள்களுக்கே நாம் அதிகமும் செலவு செய்கிறோம். உணவிற்குக் கூட நாம் அதிகம் செலவு செய்வது இல்லை. நகரங்களில்கிடைக்கும்காய்கறிகள் ஆறேழு வகைகளுக்கு உட்பட்டதாக பெரும்பாலான சூப்பர் மார்க்கெட்டுகளில் சுருங்கி விட்டது. தக்காளி, வெங்காயம், உருளை, கத்தரிக்காய், கரட், பீன்ஸ், அவரை என்பவையே எப்போதும் கடைகளில் காணப்படுகின்றன. மற்றவை அரிதாகவே கிடைக்கின்றன. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நமது உணவு வகைகள் குறைந்துகொண்டே வருகின்றன. ஆனால், நுகர்வு சாதனங்கள் அதிகரித்தபடியே உள்ளன.

பொருள் தேவை என்பது, அதாவது பணத் தேவை என்பது நாளுக்கு நாள் அதிகரித்தபடியே வருகின்றது. நகரங்களில் தரமான வாழ்வை மேற்கொள்ள அதிகமும் செலவு செய்ய வேண்டி உள்ளது. பொருள் சார்ந்த தரமான வாழ்க்கை என்பதும், இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழ்வதும் வேறு வேறு மன நிலைகள், என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

பொதுத் தளத்தில், நமக்கான மரியாதை, அடையாளம் என்பதை இரு விடயங்களே பிரதானமாகத் தீர்மானிக்கின்றன. நமது அறிவுத் திறன் மற்றும் பொருள் இருப்பு. செல்வந்தர்களாக இல்லாது போனாலும் கலைத் திறன், படைப்புத் திறன், அறிவுத் திறன் சார்ந்து எவரையும் நாம் மதிக்கிறோம். அல்லது செல்வந்தர்களை, அரசியல்வாதிகளை (இவர்கள் பலரும் செல்வந்தர்களே) மதிக்கிறோம்.என்பதே உண்மை .

தொகுப்பு - ப்ரியமதா பயஸ்-

## உங்கள் மீது தவறு இருந்தால் யார் சொன்னாலும் திருத்திக்கொள்ளுங்கள்!



ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணம் இருக்கும், படிப்போ அல்லது வேலையோ நாம் தான் முதலில் இருக்க வேண்டும் என்று நினைப்போம், அதற்கு எந்த மாய மந்திரமும் இல்லை பின்வரும் வழிகளை பின்பற்றினால் போதும்

முதலில் நேரத்தை உருப்படியாக செலவிட தெரிந்து கொள்ளுங்கள் அதுதான் வெற்றிக்கான முதல் படி.

தோல்வியை கண்டு பயாப்படாமல், கீழே விழுவது வேகமாக எழுவதற்காக என்பதை புரிந்துகொள்ளுங்கள், நீங்களாகவே எழுந்து வரவேண்டும் உங்கள் தன்னம்பிக்கை தவிர வேறு எந்த கையையும் எதிர்பார்க்காதிங்க.

பிடித்த விசயங்கள் மட்டும் தான் செய்வேன் என்று பிடிவாதமாக இருக்காதீர்கள், நீங்கள் செய்யும் பணிகளை பிடித்ததாக மாற்றிக் கொள்ளுங்கள்.

எதற்கும் பயப்படாமல், தேங்கி இருக்கும் குளம் போல் இல்லாமால் ஆறுகள் போல புதிய முயற்சி நோக்கிச் செல்லுங்கள்.

நமது எண்ணங்கள் தான் நம்மை உருவாக்கும் அதற்காக எப்பொழுதும் நல்லதே நினையுங்கள்,எல்லாம் நன்மைக்கே என்று எப்பொழுதும் பாசிடிவ்வாக இருங்கள் எதிர்மறையான எண்ணங்களை உங்கள் அகராதியிலிருந்து துடைத்து எறியுங்கள்.

வாய்ப்புகள் எந்த நிமிடத்தில் வேண்டு மானலும் வரும் அதனை நன்றாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும், உங்களுக்கான வாய்ப்புகளை நீங்களே உருவாக்குங்கள் நான் என்ற எண்ணத்தை விட்டுவிட்டு இறை நம்பிக்கையோடு உழைக்க கற்றுக்கொள்ளுங்கள். நாளை என்று எதையும் தள்ளிப்போடாதீர்கள் எந்த ஒரு முடிவையும் துணிச்சலாக எடுங்கள் வெற்றி பெற உழைப்புதான் முதல் சாவி அதனால் தினமும் உங்களுக்கான உழைக்கும் நேரத்தை எதற்காகவும் மாற்றிக் கொள்ளாதீர்கள் (படிப்பவர்களுக்கு படிப்புதான் உழைப்பு) உயர்ந்த இடம் உடனடியாக கிடைத்து விடாது, ஒவ்வொரு படியாக, மெதுவாக ஆனால் உறுதியாக முன்னேறுங்கள்.

உங்கள் மீது தவறு இருந்தால் யார் சொன்னாலும் திருத்திக்கொள்ளுங்கள், அதேநேரம் தவறு உங்கள் மீது இல்லை என்றால் யார் எதிர்தாலும் செய்து முடியுங்கள். இறுதியாக வாழ்க்கையில் பணத்தால் மட்டும் சந்தோசம் வருவது இல்லை, உங்கள் உடன் இருப்பவர்களையும் நேசிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

## நாம் ஒருவரை மன்னிப்பதற்கான காரணங்கள் இவையாக இருத்தல் கூடாது

ஒருவரால் அதிகமாக பாதிக்கப்பட்ட பிறகும் அவர்களை மன்னிப்பது எப்படி?

ஒருவரால் மனம் பாதிப்படைந்த பின்னும் அவரை மன்னிக்க இயலுமா?

நிச்சயமாக முடியும். அவர்களை மன்னிப்பதன் மூலம் நாம் நமது மனதை வலிமையாக்குகிறோம்.

இதில் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டியன சில உள்ளன. நாம் ஒருவரை மன்னிப்பதற்கான காரணங்கள் இவையாக இருத்தல் கூடாது.

நமக்கு நெருக்கமானவர்கள் அவர்கள். ஆதலால் அவர்களை விட்டு விலகாமல் இருக்க அவர்கள் என்ன செய்தாலும் மன்னித்து விடுவது.

சூழ்நிலை கருதி மன்னித்தது போல போலியாக நமக்குள்ளேயே வேடமிடுவது.

ஒருவரை மன்னிப்பது அவரது தவறுகளை ஏற்று அவருக்கு மற்றொரு வாய்ப்பு வழங்குவதல்ல. நமக்கு ஏற்பட்ட காயத்தின் வலியை அவர்கள் மீதான வன்மமாக மனதில் வளர விடாமல் மன்னித்து அதற்கு முற்றுப்புள்ளி வைப்பது.

நம் காயம் நமக்கு பெரிது தான். ஆனால் அதைத் தேக்கி வைப்பதன் மூலம் நாம் வளர்ச்சி அடையே வேண்டுமே தவிர்த்து அதிலேயே உழன்று அவர்களுக்கு பதிலடி கொடுப்பதே நம் இலக்காக மாறிவிடக் கூடாது. மன்னிப்பதன் மூலம் நம் மனம் இலகுவாகும். காயங்கள் மறையாவிட்டாலும் அதன் தாக்கம் குறையும். ஒருவரை மனமார மன்னிப்பது நமக்கு நல்லதே. ஆனால் கடுமையான சூழலில் வற்புறுத்தலின் பெயரில் அது பிறக்காது. அப்படி நம்மை நாமே ஏமாற்றினாலும் அது நிலைக்காது. வாழ்க்கை குறித்து நீங்கள் ஆழ்ந்து சிந்தித்து தெளிவுறுவதன் மூலம் தான் இதைக் கடக்க முடியும்.

அவரவர் செய்வதற்கான பலனை அவரவரே அடைந்து விடுவர். ஆதலால் அதைப்பற்றி வருந்தி நம் பொன்னான நேரத்தை வீணடிக்க வேண்டாம்.

## அடிப்படையான பாடம்

துக்கமான சூழலில் நீங்கள் என்ன முடிவு எடுத்தாலும் அது மீண்டும் உங்களை துக்கத்தில் தான் கொண்டு போய் விடும் இதை உங்கள் வாழ்க்கையில் ஒரு அடிப்படையான பாடமாக வைத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் மனநிலை சரியில்லாத துக்கமான நேரத்தில் எந்த முடிவையும் அவசரப்பட்டு எடுக்காதீர்கள்.

அது போன்ற நேரங்களில் இறைவனை மனதில் நினைத்துக் கொண்டு அமைதியாக தியானம் செய்யுங்கள் அல்லது நன்றாக சாப்பிட்டு விட்டு உறங்கி விடுங்கள்.



# வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் மெதுமெதுவாக உருவாகி வருவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது

## வரவேற்கிறார் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.வி.ஈ.இரவிச்சந்திரன் அடிகளார்

எட்டு ஆண்டுகளாக யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின் அன்பியம் – பொதுநிலையினர் – இளைஞர் ஆணைக்குழுக்களுக்கு இயக்குநராகப் பணியாற்றியுள்ளேன். அக்காலங்களில் பல தடவைகள் மேற்படி குழு உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு கொழும்பு மற்றும் தெற்கின் பல்வேறு பகுதிகளுக்கும் தேசிய ஆணைக்குழுக் கூட்டங்களுக்குச் சென்றுள்ளேன். அக்கூட்டங்களுக்கு வரும் பெரும்பாலானவர்கள் சிங்கள மக்கள். கூட்டங்கள் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே நடைபெறும். இங்கிருந்து பெரும் சிரமங்கள் மத்தியில் பயணம் செய்து அங்கு செல்லும் நாம் வெறும் பார்வையாளர்களாக இருந்து விட்டு திரும்பிய அனுபவங்களே அநேகம். அப்போதெல்லாம் வடக்குக் கிழக்குக்கென தனி ஆயர் பேரவை உருவானால் எவ்வளவு சிறப்பாக இருக்கும், தமிழில் கூட்டங்களை நடத்தித் திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தலாமேயென இதயம் ஏங்கும். அதற்கான காலம் இப்போது கைகூடி வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது. – எனத் தன் எண்ணங்களைப் பகிர்கிறார் யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.வி.ஈ.இரவிச்சந்திரன் அடிகளார்.



**அடிளார்பற்றி.......**

எம்.வி.ஈ.இரவிச்சந்திரன் அடிகளார் 1995 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்று குருநகர் புனித யாகப்பர் ஆலயம், யாழ் புனித மரியன்னை பேராலயம் ஆகிய பங்குகளில் உதவிப் பங்குத்தந்தையாகவும், பண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயம், அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயம், சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலயம், நாவாந்துறை புனித மரியன்னை ஆலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயம், றக்கா றோட் புனித திரேசம்மாள் ஆலயம் ஆகிய பங்குகளில் பங்குப் பணியாற்றியுள்ளார். உரோமை உர்பன் பல்கலைக்கழகத்தில் இறையியல் இளங்கலைமாணி மற்றும் முதுகலைமாணிப் பட்டங்களையும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் தத்துவ முது கலைமாணிப் பட்டத்தையும் பெற்றவர்.

1997ஆம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையின் விரிவுரையாளராக பணியாற்றி வரும் இவர் தற்போது யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார். 1997ஆம் ஆண்டு முதல் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் 2012ஆம் ஆண்டு முதல் புனித யோசவ் வாஸ் இறையியல் கல்லூரியில் நிரந்தர விரிவுரையாளராகவும் பணி புரிகிறார்.

### வடக்குக் கிழக்கு ஆயர் மன்றம்

இலங்கைத் தீவில் வடக்குக் கிழக்கில் காணப்படும் நான்கு மறைமாவட்டங்களையும் இணைத்த ஒரு ஆயர் மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டு கடந்த சில மாதங்களாக இயங்கி வருகின்றது. இத்தகைய ஆயர் பேரவையின் தேவை மற்றும் நியாயப்பாடு தொடர்பாக காலைக்கதிரின் கிறிஸ்தவ செய்தி இதழ் தொடர் கருத்துக்களை வழங்கி வருகின்றது. அந்த வகையில் இவ்விதழில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

### ஆயர் பேரவை என்றால் என்ன?

கத்தோலிக்க திரு அவையின் இரண்டாம் ஆவியின் திருப்பொழிவு என அழைக்கப்படும் இரண்டாம் வத்திக்கான் சங்கமானது மூன்றாம் மிலேனியத்தில் கத்தோலிக்க திரு அவை பயணிக்க வேண்டிய வழித்தடங்களை திசை காட்டி நின்றது. அந்தச் சங்கம் ஆயர் பேரவை என்றால் என்ன என்பதையும் அதன் நோக்கம் என்ன என்பதையும் பின்வருமாறு கூறுகின்றது.

‘ஆயர் பேரவை என்பது ஒருவகைக் குழுவாகும். இக்குழுவின் மூலமாக ஒரு குறிப்பிட்ட நாட்டின் அல்லது நிலப்பரப்பின் ஆயர்கள் தங்கள் அருள்பணியை ஒருங்கிணைந்து செய்கின்றனர். குறிப்பாக, காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ற திருத்தூதுப் பணி முறைகள், திட்டங்கள் வழியாகத் திருச்சபை மக்களுக்கு வழங்கும் மேலான நலன்களைப் பெருக்குவதே இப்பேரவையின் நோக்கமாகும்.’ (ஆயர்களின் அருள்பணி எண். 38)

‘மக்களின் அருள்வாழ்வு நலனைப் பேண மறைமாவட்டங்களுக்கு மட்டுமல்ல, மறைமாநிலங்களுக்கும் ஏற்ற எல்லைகள் தேவைப்படுகின்றன. உண்மையில் இது மறை மண்டலங்களை ஏற்படுத்தவும் தூண்டுதல் அளிக்கிறது. இங்ஙனம் சமூக, இட சூழ்நிலைகளுக்கேற்பத் திருத்தூதுப் பணித்தேவைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்ற இயலும்.’ (ஆயர்களின் அருள்பணி எண். 39)

இச்சங்கத்தின் பின் உருவாக்கப்பட்ட திரு அவையின் சட்டக் கோவை பின்வருமாறு விளக்குகின்றது:-

‘ஆயர் பேரவை என்பது நிரந்தரமான ஓர் அமைப்பாகும். அது ஒரு நாட்டின் அல்லது ஒரு குறிப்பிட்ட எல்லையின் ஆயர்கள் குழுவாகும். இதன் மூலம் ஆயர்கள் தங்கள் எல்லையைச் சார்ந்த கிறிஸ்தவ விசுவாசிகளுக்காகச் சில மேய்ப்புப் பணிகளை ஒருங்கிணைந்து செயலாற்றுகின்றனர். காலம் மற்றும் இடத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்றத் திருத்தூதுப் பணி முறைகள், திட்டங்கள் வழியாக, சட்டத்தின் விதிமுறைக் கேற்பத் திருச்சபை மக்களுக்கு வழங்கும் மேலான நலன்களை மேம்படுத்துவதே இப்பேரவையின் நோக்கமாகும்.‘(திரு அவைச் சட்டக் கோவை எண் 447)

கத்தோலிக்க திரு அவையின் மேற்படி அதி உயர் ஆவணங்கள் சுட்டிக்காட்டுவது மிகத்தெளிவானது. ஒரு ஆயர் பேரவை எனப்படுவது -

குறிப்பிட்ட எல்லையைச் சார்ந்த ஆயர்கள் -
காலம் மற்றும் இடத்தின் சூழ்நிலைக்கேற்ப -
தம் எல்லையைச் சார்ந்த மக்களுக்கான -
பணிகளை முன்னெடுக்க -
திட்டங்களை உருவாக்கி முன்னெடுக்கும் -
ஒரு நிலையான அமைப்பாகும்.

இதன் அடிப்படையில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு பகுதியானது தமக்கென ஒரு ஆயர் பேரவையை உருவாக்கி வழிநடப்பதற்கான சகல தேவைகளையும் நியாயப்பாடுகளையும் கொண்டுள்ளது.

### தமிழில் கூட்டங்களை நடத்தித் திட்டங்களைத் தீட்ட ஏங்கினோம்

எட்டு ஆண்டுகளாக யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் அன்பியம், பொதுநிலையினர், இளைஞர் ஆணைக் குழுக்களுக்கு இயக்குநராக பணியாற்றியுள்ளேன். அக்காலங்களில் பல தடவைகள் மேற்படி குழு உறுப் பினர்களை அழைத்துக் கொண்டு கொழும்பு மற்றும் தெற்கின் பல்வேறு பகுதிகளுக்கும் தேசிய ஆணைக்குழுக் கூட்டங்களுக்குச் சென்றுள் ளேன். அக்கூட்டங்களுக்கு வரும் பெரும்பாலானவர்கள் சிங்கள மக்கள். கூட்டங்கள் பெரும்பாலும் சிங்கள மொழியிலேயே நடைபெறும். இங்கிருந்து பெரும் சிரமங்கள் மத்தியில் பயணம் செய்து அங்கு செல்லும் நாம் வெறும் பார்வையாளர்களாக இருந்து விட்டு திரும்பிய அனுபவங்களே அநேகம். அப்போதெல்லாம் வடக்குக் கிழக்குக்கென தனி ஆயர் பேரவை உருவானால் எவ்வளவு சிறப்பாக இருக்கும், தமிழில் கூட்டங்களை நடத்தித் திட்டங்களைத் தீட்டி செயற்படுத்தலாமேயென இதயம் ஏங்கும். அதற்கான காலம் இப்போது கைகூடி வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி தருகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

### வடக்கு கிழக்கு ஆயர் மன்றத்தின் நம்பிக்கை தரும் முன்னெடுப்புக்கள்

முன்னோடி அமைப்பாக செயற்படும் வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் தனது முதலாவது பகிரங்க வெளிப்படுத்தலாக மே 18 இல் தமிழ் மக்கள் போரில் இறந்த தங்களது உறவுகளை நினைவு கூருவதற்கான உரிமைக்கு குரல் கொடுத்து இறுதிப் போரில் இடம் பெற்றது இனப்படுகொலையே என்பதை வலியுறுத்தியமை பெரும் நம்பிக்கையைத் தந்தது. தொடர்ந்து அவர்கள் அமைதிக்கான ஆய்வு நிலையம் ஒன்றை அமைக்க முன்வந்திருப்பதும் வரவேற்கத்தக்கது. உண்மையான அமைதி நீதியிலேதான் கட்டப்பட முடியும்.

ஆகவே மேற்படி ஆய்வு நிலையம் நீதிவழியான உண்மைக்கு உழைக்கும் என்பது எமது எதிர்பார்ப்பு.

செய்யக் கூடியவை

* மறைமாவட்ட ஆணக்குழுக்களிடையே அதிகரித்த ஒத்துழைப்பை உருவாக்கல்.
* இணைந்த செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.
* நிரந்தர செயற்பாட்டு மையமொன்றை பொதுவான பொருத்தமான இடத்தில் உருவாக்கல்.
* பொதுவான வழிபாட்டுப் பாடல் புத்தகங்களை உருவாக்கல்.
* மறையறிவு போட்டிகள் பரீட்சைகளை பொதுவாக நடாத்துதல்.
* பண்பாட்டு வடிவங்களை பரிமாறிக் கொள்ளுதல்.
* வளங்களை - குறிப்பாக மனித வளங்களை - பரிமாறிக் கொள்ளுதல்

ஒரு மொழி பேசும் ஒரே பண்பாட்டைச் சேர்ந்த மக்கள் இவ்வாறு பல விடயங்களில் இணைந்து செயற்பட்டு பயன்பெறலாம்.

வடக்கு, கிழக்கு ஆயர் பேரவையை நோக்கிய பயணம் உறுதியானதாகவும் நிலைபேறானதாகவும் அமையட்டும்.

குறிப்பு :- வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் தொடர்பாகத் தம் எண்ணங்களைப் பகிர விரும்புவோர் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ், பிசப் சவுந்தரம் மீடியா சென்றார், இல. 891 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

# மட்டக்களப்பில் மேய்ச்சல் காணிகளில் இராணுவமுகாம் ஆளும் தரப்பு எம்.பிக்களின் உடந்தையுடனான அமைப்பு

## இரா.துரைரெட்ணம் கேள்வி




மட்டக்களப்பு மாவட்டத்தில் கால்நடைகளின் மேய்ச்சல் தரையின் 10 ஆயிரம் ஏக்கர் காணியை இராணுவ முகாமாக மாற்றுவதற்குரிய செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றமை தொடர்பாக ஆளும் தரப்பாக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் (பிள்ளையான்) இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் இருவருக்கும் தெரியுமா? அல்லது இருவருடைய உடந்தையுடனா இது இடம்பெறுகின்றது என ஈ. பி. ஆர். எல். எப். பத்மநாபா மன்ற தலைவரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான இரா.துரைரெட்ணம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா மன்ற காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு செங்கலடி கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கால்நடை பண்ணையாளர்களுக்குரிய காணிகள் 4 தசாப்தங்களுக்கு மேலாக கால்நடை பண்ணையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இந்தக் காணியில் 10 ஆயிரம் ஏக்கர் காணியை இராணுவ முகாமாக மாற்றுவதற்குரிய செயற்திட்டங்களை அரசு மேற்கொள்கின்றதா?

இந்தத் திட்டத்தால் கிடத்தட்ட 30 ஆயிரம் கால்நடைகளுடன் 150 இற்கு மேற்பட்ட கால்நடை பண்ணையாளர்கள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, இந்தத் திட்டம் நிறுத்தப்பட வேண்டும். என்பதுடன் இந்தக் காணிகளை காணி பயன்பாட்டுக்குழுவின் அனுமதியுடன் வழங்கப்பட்டாதா என்ற கேள்விக்கு அப்பால் இந்தக் காணிகளை கால்நடை பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்கு ஆளுந்தரப்பைச் சேர்ந்த இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொரோனா சம்பந்தப்பட்ட தடுப்பூசி மேற்கொள்ளப்பட்டுவருவதால் மிகவிரைவாக மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும். இந்த மாகாணசபைத் தேர்தலைப் பொறுத்தவரையில் வடக்கு கிழக்கில் உள்ள பெரும்பான்மையான தமிழ்க் கட்சிகள் 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்துவதற்கு கொள்கை ரீதியாக இணக்கம் தெரிவித்த நிலையில் இந்த மாகாணசபை முறைமை என்பது முழு இலங்கைக்கும் சாதகமான நிலை உருவாக்கும் காரணத்தால் மாகாணசபைத் தேர்தலை மிகவிரைவாக அமுல்படுத்துவதற்கும் விகிதாசார தேர்தல் முறையை அமுல்படுத்துவதற்கும் இந்திய அரசாங்கம் தலையிட்டு இலங்கை அரசு ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை, இலங்கையின் பொருளாதாரத் தேவைக்காக சீன அரசாங்கத்துக்கு மட்டும் இலங்கையை தாரைவாத்துக் கொடுப்பது என்பது துரோகத்தனமான செயற்பாடு. எனவே, அரசாங்கம் அயல்நாடுகளிலும் சர்வதேச மேலேத்தேய நாடுகளுடனும் ஒரு சரியான ஓர் இணக்கப்பாட்டுடன் இலங்கையில் தேசியத்துக்கு எந்தவிதமான குந்தகமும் வராமலும் வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசியத்துக்கு எந்தவித குந்தகமும் வராமல் வெளிநாட்டுக் கொள்கைகளை அமுல்படுத்தப்பட வேண்டும். - என்றார்.

# கொக்காவில் பகுதியில் பாரிய கிரவல் அகழ்வு

## அதிரடியாக களத்தில் இறங்கிய அதிகாரிகள்



முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்காவில் பிரதேசத்தில் மிகப் பாரியளவில் கிரவல் அகழ்வு இடம்பெற்றுவருவதோடு பாரிய வனப்பகுதியும் அழிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த விடயங்கள் தொடர்பில் பல்வேறு கலந்துரையாடல்களில் கலந்துரையாடப்பட்டாலும் எந்தவிதத் தீர்வுகளுமின்றி குறித்த கிரவல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றது.

இங்கு பாரிய அளவில் காடுகள் அழிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் ஊடகங்களிலும் பல்வேறு தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று (சனிக்கிழமை) காலை குறித்த கொக்காவில் பகுதிகளில் புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது கொக்காவில் பகுதியில் இடம்பெற்ற கிரவல் அகழ்வைப் பார்வையிட்டபோது அங்கு சட்டவரம்புகள் மீறப்பட்டு பாரிய அளவில் கிரவல் அகலப்பட்டதை இரண்டு இடங்களில் மூன்று அகழ்வுப் பத்திர அனுமதிகளை பயன்படுத்தி இடம்பெற்ற பாரிய சட்டமீறலை அவதானித்த நிலையில் உடனடியாக மூன்று அனுமதிப்பத்திர நபர்கள் மற்றும் 6 பக்கோ இயந்திரங்கள் 6 சாரதிகளையும் ஐயன்கன்குளம் பொலிஸாரிடம் முறையிட்டு ஒப்படைத்தனர்.

புவிச்சரிதவியல் திணைக்கள அதிகாரிகள் செய்த முறைப்பாட்டுக்கு அமைய ஐயன்கன்குளம் பொலிஸார் 6 பக்கோ இயந்திரங்களையும் பக்கோ இயந்திர சாரதிகள் 6 பேர் மற்றும் அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் மூவர் உள்ளடங்கலாக 9 பேரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துவரும் ஐயன்கன்குளம் பொலிஸார் இவர்களுக்கெதிராக நீதிமன்றம் ஊடாக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனத் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் குறித்த செயற்பாடுகளுடன் தொடர்புடைய 5 டிப்பர் வாகனங்கள் சுமார் 5 மணிநேரமாக தடுத்து வைக்கப்பட்டிருந்தபோதும் அவை கைப்பற்றப்படாது அவற்றிலிருந்த மண்ணை பறித்து விட்டு விடுவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சுபீட்சத்தின் இலக்குக் கொள்கைத் திட்டத்தின் முதலாவது பல்கலைக் கழகம் கேகாலையில்



சுபீட்சத்தின் இலக்கு கொள்கைத்திட்டத்துக்கு அமைய பெருநகரப் பல்கலைக்கழக திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதலாவது பல்கலைக்கழகம் கேகாலை மாவட்டத்தில் பின்னவெல எனும் பகுதியை மையப்படுத்தி அமைக்கப்படவுள்ளது. எதிர்வரும் வாரங்களில் அதற்கான பணிகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

பெருநகரப் பல்கலைக்கழகத் திட்டத்தை ஓர் எண்ணக்கருவாக அறிமுகப்படுத்தும் வகையில் அதன் உத்தியோகபூர்வ இணையத்தளம் www.cu.ac.lk 2021 - உலக இளைஞர் திறன் தினத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புதிய தொழினுட்பத்தின் மூலம் தொழில் சந்தையை இலக்காகக் கொண்ட திறமையான பட்டதாரிகளை உருவாக்கும்நோக்கில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் பெருநகரப் பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும்.

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை தொடர்ந்து பல்கலைக் கழகங்களுக்குத் தகுதி பெறுகின்றவர்களில் 80 சதவீதமானவர்கள் பல்கலைக்கழக வாய்ப்பை இழக்கிறார்கள். பொருளாதார ரீதியில் வசதியுள்ள மாணவர்கள் தனியார் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்கிறார்கள். உயர்தரத்தில் சித்திப் பெற்று பொருளாதார ரீதியில் வசதியில்லாத மாணவர்களுக்குத் தொழில் சந்தைக்கு ஏற்ற வகையில் பட்டப்படிப்பை வழங்குவது இந்த பெருநகர பல்கலைக்கழகத்தின் பிரதான இலக்காகும்.

ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தனித்துவமான, உள்நாட்டு மற்றும் உலகளாவிய தொழில் சந்தைக்கு பொருந்தும் வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன எனதிறன் விருத்திதொழில் கல்வி மற்றும் புத்தாக்கத்துறை இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டு 4 சதவீதமாக காணப்பட்ட இளைஞர்களின் தொழிலின்மை வீதம் 2019 ஆம் ஆண்டு 16 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

தற்போதைய உலகளாவிய நிலைமைக்கு அமைய தொழிலின்மை வீதம் 30 சதவீதமாக அதிகரிக்கக் கூடும். ஆகவே பட்டப்படிப்பின் மூலம் திறமையான இளைஞர்களை உருவாக்க வேண்டும். என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பட்டதாரிகள் அரச தொழிலை எதிர்பார்க்கிறார்கள். எனினும் அரசாங்கத்தின் பொறுப்பானது தொழில்களை வழங்குவதல்ல மாறாக தொழில்களை உருவாக்கும் ஒரு விரிவான பொருளாதார சூழலை உருவாக்குவதாகும்.

பெருநகர பல்கலைக்கழக திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தில் நேரடியாக தொடர்பு கொள்ளக் கூடிய அல்லது சுய தொழிலில் ஈடுபடக் கூடிய அறிவுள்ள நபரை பட்டப்படிப்பின் முடிவில் உருவாக்குவது பிரதான எதிர்பார்ப்பாகும். நூற்றுக்கு நூறு சதவீதம் அரச பல்கலைக்கழகங்களை நடத்த முடியாது. இருப்பினும் தனியார் பல்கலைக்கழகங்களை ஒரு வியாபாரமாக நடத்துவது எதிர்க்கத்தக்கது. என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

# வவுனியாவிற்கு கொவிட் தடுப்பூசிகள் கிடைக்காமை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்குக் கடிதம்

வவுனியாவிற்கு கொரோனாத் தடுப்பூசிகள் கிடைக்காமல் காலதாமதமாகிறது. இது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளருக்கு வவுனியா அரச வைத்திய அதிகாரிகள் சங்கச் செயலாளர் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

வவுனியா மாவட்டத்துக்கு கொரோனாத் தடுப்பூசி கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருகின்றது. மாகாணத்தில் கொரோனா அச்சுறுத்தல் நிறைந்த இரண்டாவது மாவட்டமாக வவுனியா காணப்படுவதுடன் பல மாவட்டங்களுடன் தொடர்புடைய மாவட்டமாகவும் உள்ளது. இவ்வாறான நிலையில் இம் மாவட்டத்துக்கு தடுப்பூசி கிடைப்பதில் காலதாமதமாகுவதால் மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

எனவே தடுப்பூசியை வவுனியா மாவட்டத்துக்கு பெற விரைந்து நடவடிக்கை எடுத்து தருமாறு கோருகின்றோம் என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் டெல்டா மாறுபாட்டால் பொறுப்புடன் செயற்பட வேண்டுகோள்

## விடுக்கின்றது சுகாதார அமைச்சு

டெல்டா மாறுபாடு கொண்ட நோயாளிகள் 38 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் சுகாதார அமைச்சு கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்தி, மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது.

சுகாதார வழிகாட்டுதல்களின் தளர்வு என்பது நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளைப் பேணுவதற்கானது என்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

நாட்டைக் காலவரையறையின்றி மூடி வைப்பதால் எவ்விதப் பயனும் இருக்காது என சுட்டிக்காட்டிய அவர், மக்கள் பொறுப்பை தங்கள் கையில் எடுத்துக்கொண்டு உரிய முறையில் செயற்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதன் மூலமோ இறுக்கமான கட்டுப்பாடுகள் மூலமாகவோ தொற்று நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்றாலும் அது பொருளாதாரத்தை வலுப்படுத்தாது என்றும் கூறினார்.

இந்நிலையில் அறிவிக்கப்பட்ட தளர்வுகளை சாதகமாக எண்ணி மக்கள் அலட்சியத்துடன் செயற்பட்டால், கட்டுப்பாடுகளை கடுமையாக்க அதிகாரிகள் நடவடிக்கை



எடுப்பார்கள் என்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

எனவே, சுகாதார நடைமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பதில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவ்வாறு செய்யத் தவறி னால் அது பேரழிவு தரும் சூழ்நிலையில் முடிவடையும் என்றும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் மேலும் குறிப்பிட்டார்.

## கொவிட் தடுப்பூசி ஏற்றும் பணி மாமாங்கத்தில் முன்னெடுப்பு

மட்டக்களப்பில் கொரோனாத் தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்டிவருகின்றமையை அவதானிக்க முடிகின்றதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பிலுள்ள பெரும்பாலான பகுதிகளில் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள், துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று (சனிக்கிழமை), மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.கிரிசுதன் தலைமையில் மாமாங்கம் சதா சகாய மாதா ஆலயத்திலும் கொரோனாத் தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் இடம்பெற்றன.

இதில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பெருமளவில் கலந்துகொண்டு, தங்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## 410 மூடை சிப்பிகளுடன் மட்டுநகரில் மூவர் கைது



மட்டக்களப்பு வாழைச்சேனையில் இருந்து குருநாகலுக்கு கொள்கலன் பாரவூர்தியில் சட்டவிரோதமாக 410 மூடை சிப்பிகள் கடத்தி செல்லப்பட்ட நிலையில் நேற்று (சனிக்கிழமை) அதிகாலையில் வாழைச்சேனை நாவலடிச் சந்தியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கொழும்பு - திருகோணமலை பிரதான வீதி சந்தியான நாவலடிச் சந்தியில் சம்பவ தினமான நேற்று அதிகாலை 3 மணியளவில் வீதிச்சோதனை நடவடிக்கையில் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

இதன்போது வாழைச்சேனையில் இருந்து கொழும்பு நோக்கி பிரயாணித்த கொள்கலன் பாரவூர்தியை நிறுத்தி சோதனையிட்டனர்.

இதன்போது சட்டவிரோதமாக தலா 50 கிலோ கொண்ட 410 மூடை சிப்பிகளை குருநாகலுக்கு கடத்திச் செல்வதாக கண்டறியப்பட்டதை அடுத்து அதனைக் கடத்திச் சென்ற 3 பேரை கைது செய்தமையுடன் சிப்பியுடன் கொள்கலன் பாரவூர்தியை மீட்டு வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## ஆடிப்பிறப்பு நிகழ்வு மன்னாரில் நடந்தது



'ஆடிப்பிறப்பில் தமிழர் நாம் கூடிக்கொண்டாடிக் குதூகலிப்போம்' எனும் கருப்பொருளில் மன்னாரில் ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

மன்னார் அன்னை இல்லத்தில், மாவட்ட செயலகம் மற்றும் வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியவை இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதில் மாணவர்களின் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் மாவட்ட அரசாங்க அதிபரால், மாணவர்களுக்கு பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# மாங்கல்யா

## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
077 197 1667
077 316 4796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி – 1991.01.28 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருவாதிரை
கி.பா – 31 செவ் – 01 இல்
தகைமை – M.B.B.S
தொழில் – DOCTOR
எதிர்பார்ப்பு – DOCTOR,ENG மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1995.06.07 மதம் – இந்து
ஜாதி – P பகுதி ஆண் நட்சத்திரம் – உத்தரம் 2
கி.பா – 24 செவ் – 3 இல்
தகைமை – G.C.E A/L
தொழில் – SWISS
எதிர்பார்ப்பு – SWISS PR உள்ள மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1988.08.21 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அனுசம் 3
கி.பா – 48 செவ் – 7 இல்
தகைமை – M.BB.S
தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor Or Dentel Doctor மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1987.05.01 மதம் – இந்து
ஜாதி – குருகுலம் ஆண் நட்சத்திரம் – புரட்டாதி 1
கி.பா – 52 செவ் – 7 இல்
தகைமை – Bsc + Msc
தொழில் – Eng (USA PR ) எதிர்பார்ப்பு – Bsc பட்டதாரி (5"6 மேல் உயரமாக)மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1980.03.03 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – உத்தரம் 3
கி.பா – 16 செவ் – 3 இல்
தகைமை – M.B.A தொழில் – DO அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1986.03.21 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – பூசம் 1
கி.பா – 6 செவ் – 11 இல்
தகைமை –Bsc food science தொழில் – கட்டார் வேலை
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகள்.

பிறந்த திகதி – 1991 08.18 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – அனுசம்
கி.பா – 27 செவ் – சூரி 2
தகைமை – B.com
தொழில் – Accountant company
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1986.11.21 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – பூனர்பூசம் 4
கி.பா – 50 செவ் – 8 இல்
தகைமை – Computer Hardware diploma தொழில் – விற்பனை நிறைவேற்று அதிகாரி எதிர்பார்ப்பு – அரச சேவை, தனியார் படித்த மணமகள் தேவை.

### மணமகள் விவரம்

பிறந்த திகதி – 1992.07.13 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மூலம் 4
கி.பா – 42 செவ் – 5 இல்
தகைமை –B.sc Civil Eng தொழில் – அரசசேவை
எதிர்பார்ப்பு – அரசசேவை+வெளிதகு பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1994.12.26 மதம் – இந்து
ஜாதி – K பெண் நட்சத்திரம் – அத்தம் 2
கி.பா – 38 செவ் – 11 இல்
தகைமை – H.N.DA தொழில் – Post master
எதிர்பார்ப்பு – அரசசேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1992.02.25 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – அனுசம் 8
கி.பா – 25 செவ் – 2 இல்
தகைமை – Bsc தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி மணமகன்.

பிறந்த திகதி – 1991.03.12 மதம் – இந்து
ஜாதி – N பெண் நட்சத்திரம் – உத்தராடம்
கி.பா – 35 செவ் – 12 இல்
தகைமை – 13A தொழில் – DO அரசசேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை வெளிநாடு pr மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1991.07.15 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூரம்
கி.பா – 49 செவ் – 9 இல்
தகைமை – Software Eng தொழில் – Company
எதிர்பார்ப்பு – Doctor, Eng மணமகன் தேவை.

பிறந்த திகதி – 10.01.1986 மதம் – இந்து
ஜாதி – சாண்டார் பெண் நட்சத்திரம் – பூராடம்
கி.பா – 14 செவ் – 11 இல்
தகைமை – – Bsc Msc தொழில் – அரசசேவை
எதிர்பார்ப்பு – அரசசேவை மணமகன். (K.Vவிருப்பம்)

பிறந்த திகதி – 1991.04.16 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பரணி 2
கி.பா – 22 செ – 2 இல்
தகைமை – M.B.B.S.
தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor, Eng மணமகன் தேவை. (யாழ்வேலை)

பிறந்த திகதி – 1993.09.04 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – ரேவதி 3
கி.பா – 15 செவ் – 7 இல்
தகைமை – Bsc spicl EAC (சிறப்பு) தொழில் – அரசசேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை தனியார் கொழும்பிலுள்ள மணமகன் தேவை.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் விக்கி அணியினருடன் செல்வம், சித்தர் நேரடிப் பேச்சு

## மாவை பங்கேற்கவில்லை

(ந.லோகதயாளன்)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய இரு கட்சிகளின் தலைவர்களும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியினரும் யாழ்ப்பாணத்தில் நேற்று நேரடிப் பேச்சில் ஈடுபட்டனர்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த் தன், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் ரெலோவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், எஸ்.விநோநோகராதலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.**

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், என். சிறிகாந்தா, எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ முன்னெடுத்து வரும் ஒற்றுமை முயற்சியின் ஓர் அங்கமாக இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

எனினும், மாவை சேனாதிராஜா தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை.

இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்த ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராஜாவுக்கு தொலைபேசி வழியாக அழைப்பு விடுத்திருந்தார். எனினும், அவர் பிறிதொரு நிகழ்வுக்காகக் கொழும்பில் தங்கியுள்ளார். அதனால் அவர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், அவர் சார்பில் பிரதிநிதிகள் எவரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

எமது ஒற்றுமை முயற்சி பதவியை, தலைமையை நோக்கமாகக் கொண்டதல்ல. மக்கள் நலன் சார்ந்தது எனக் கூட்டத்தின் ஆரம்பத்தில் ரெலோ தரப்பால் கூறப்பட்டது. எனினும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் சார்பின் கலந்து கொண்ட அதன் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்.தலைவர் சுரேஷ்பிறேமச்சந்திரன் கொஞ்சம் காட்டமாகக் கருத்து தெரிவித்தார்.

ஏற்கனவே 10 கட்சிகள் ஒற்றுமை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் தமிழ்த் தேசியப் பேரவை பற்றி நான் கருத்துத் தெரிவித்தது பிழை என்று தமிழரசுக் கட்சி குழப்பியது. ரெலோவும் அதை ஆதரித்து அறிக்கை வெளியிட்டது. அது பிழையென்றால், அது பற்றி கலந்துரையாடியிருக்கலாம். அதை விட்டு, குழப்புவதைப் போல் நடந்து விட்டு, இப்போது புதிய கூட்டணி முயற்சிக்கு ஏன் வருகின்றீர்கள்? என்று செல்வம் அடைக்கலநாதனிடம் கேள்வியெழுப்பினார் சுரேஷ்.

பழைய முயற்சிகளில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதை நிவர்த்தி செய்து அதனையே தொடரலாம் என்றும் சுரேஷ் குறிப்பிட்டார்.

எனினும், ஒற்றுமை முயற்சியின் அவசியத்தை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் ஏனைய இரண்டு கட்சி களான தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய கட்சி ஆகியன ஏற்றுக்கொண்டன. ஆனால், அது தொடர்பில் தொடர்ந்து பேச வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்திலேயே 'செல்வம் - மாவை இந்தக் கூட்டத்துக்கு வராதமையால் உங்கள் முயற்சி பெயிலியர்' - என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

சந்திப்பின் இறுதியில் விக்னேஸ்வரன், நாம் என்ன அடிப்படையில் சேர்ந்தியங்குவதென்பதை தீர்மானிக்க வேண்டும். தமிழ்த் தேசியப் பேரவையா, கூட்டணியா அல்லது வேறு வடிவமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். எந்தப் பிரச்சினைகளில் சேர்ந்தியங்குவது என்பதையும் தீர்மானிக்க வேண்டும். அதற்காக முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பட்டியலிடுவோம். அதில் எதில் இணைந்து செயற்படுவது என்பதைத் தீர்மானிப் போம் என்று கூறினார் என அறிய வந்தது.

# அரச அராஜகத்துக்கு எதிரான எமது போராட்டம் தொடரும்!

## விடுவிக்கப்பட்ட ஜோசப் ஸ்டாலின் சூளுரை

இலவசக் கல்வியை இராணுவமயப்படுத்த முயலும் அரசின் அராஜ கத்துக்கு எதிரான எமது போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

- இவ்வாறு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

நியாயமற்ற முறையிலேயே நாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகவும், எமது விடுதலையை வலியுறுத்தியும் நாடு முழுவதும் ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுத்த அனைத்துத் தரப்பினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எமது பக்க நியாயங்களை மக்களுக்குத் தெரியப்படுத்திய சகல ஊடகங்களுக்கும் நன்றியைக் கூறுகின்றோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவு விமா னப்படை முகாமில் வலுக்கட்டாயமாகத் தனிமைப் படுத்தப்பட்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 16 பேரும் தனிமைப்படுத்தலில் இருந்து நேற்று விடுவிக்கப்பட்டனர்.

அரசின் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடந்த 8 ஆம் திகதி கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்ட ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால், நீதிமன்றத்தின் அனுமதியின்றி அவர்களை வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

நீதிமன்ற வளாகத்தில் இருந்து பொலிஸ் பஸ்ஸில் முல்லைத் தீவுக்கு அழைத்துவரப்பட்டு, கேப்பாப்பிலவு விமானப்படை முகாமில் உள்ள தனி மைப்படுத்தல் மையத்தில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்து நாடு முழுவதும் போராட்டங்களை முன்னெடுத்தனர். ஆசிரியர் சங்கங்கள் இணையவழி கற்பித்தலைப் புறக்கணித்து தொழிற் சங்க நடவடிக்கையை மேற்கொண்டன.

இதையடுத்து, 8 நாள்களின் பின்னர், நேற்று முன்தினம் மாலை அவர்கள் தனிமைப்படுத்தல் மையத்தில் இருந்து விடுவிக்கப்பட்டனர்.




## பருத்தித்துறை வர்த்தகர்கள் ஆறு பேருடன் தொடர்புடைய 70 பேரையும் காணவில்லை

(இ.கலையமுதன்)

பருத்தித்துறை நகர் வர்த்தகத் தொகுதியில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட 6 வர்த்தகர்கள் தலைமறைவாகிய நிலையில் அவர்களுடன் பணியாற்றிய 70 பேரைக் காணவில்லை என்று சுகாதாரத் துறையினர் தேடி வருகின்றனர்.

அவர்கள் சமூகத்தில் நடமாடுவதால் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் என சுகாதாரத் துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர். பருத்தித்துறை நகரில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 6 வர்த்தகர்களும் புத்தளம் மற்றும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள்.

பருத்தித்துறை நகர் வர்த்தக தொகுதியில் 23 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் 7 வர்த்தகர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டுள்ளது.

அதனையடுத்து தொற்றாளர்களை அடையாளம் கண்டு கொரோனா இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பும் பணியில் சுகாதாரத் துறையினர் ஈடுபட்ட போது 6 வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

அவர்கள் 6 பேரும் பி.சி.ஆர். மாதிரிகளை வழங்கிய நிலையில் தமது சொந்த ஊரான புத்தளம் மற்றும் காத்தான் குடிக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களுடன் பணியாற்றியவர்களைச் சுயதனிமைப்படுத்தச் சென்ற போது அவர்களும் தலைமறைவாகியுள்ளனர்.

அவ்வாறு சுயதனிமைப்படுத்துவதற்றாக 70 பேரின் விவரங்களுடன் சுகாதாரத்துறையினர் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர்.

# ராஜபக்ஷ மும்மூர்த்திகள் தலைமையில் நாளை ஆளுந்தரப்பின் முக்கிய கூட்டம்

## கட்டாயம் பங்கேற்குமாறு எம்.பிக்களுக்குப் பணிப்புரை

கொழும்பு, ஜூலை 18

ஆளுங்கட்சியின் விசேட நாடாளுமன்றக் குழுக்கூட்டம் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் பங்குபற்றலுடன் நடை பெறும் இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு ஆளுங்கட்சி எம்.பிக்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. வலுசக்தி அமைச்சர் உதயகம்மன்பில வுக்கு எதிராக முன்வைக்கப் படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை நாளை 19ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மறுநாள் 20ஆம் திகதி மாலை வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. எனவே, இதன்போது ஆளுங்கட்சியிலுள்ள அனைவரும் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் மேற்படிக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப் படவுள்ளது.

அத்துடன், அரச கூட்டணியில் நில வும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடி முக்கிய முடிவுகள் எடுக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

விளம்பரத் தொடர்புக்கு -
தொலைபேசி இலக்கம் - 076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@ gmail.com

# மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் ஜோன் கொத்தலாவல பல்கலை!

## ஜனாதிபதி அறிவிப்பு

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் கொண்டுவரப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

மகா சங்கத்தினருடன் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பல்கலை மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டத்தில் உள்ள தடைகளை நீக்கி குறித்த பல்கலைக்கழகத்தை அதன் எல்லைக்குள் கொண்டுவருவதற்கான புதிய சட்டம் தொடர்பாக ஜனாதிபதி அவர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.



இலவசக் கல்வியை இராணுவமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியிருந்தமையுடன் நாடளாவிய ரீதியில் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.07.2021 இல் வெளியிடப்பெற்றது.